விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பத்து

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 ஆனி 20 செவ்வாய்க்கிழமை (04.07.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 197

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

## சாரதி தாக்கப்பட்டதன் எதிரொலி இ.போ.ச. ஊழியர்கள் பகிஷ்கரிப்பு

### உறுதிமொழியையடுத்து கைவிடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய போக்கு வரத்துச் சபையின் சாரதி இராணுவத்தினரால் தாக்கப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து நேற்று வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் ஊழியர்கள் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

நேற்று முன்தினம் மாலை கொக்குவில் சந்தியில் இராணுவத்தினர் மீது கிரனைட் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. அப்போது அங்கு வந்த வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பஸ்ஸை மறித்த இராணுவத்தினர் அதன் சாரதியை கடுமையாகத்தாக்கினர்.

இச் சம்பவத்தைக்கண்டித்து நேற்று பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர். இதனால் பயணிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கினர். அரச ஊழியர்கள் பஸ்ஸிற்காக நீண்ட நேரம் காத்திருந்த பின் தனியார் வாகனங்களில் பயணத்தை மேற்கொண்டனர்.

பணிப்புறக்கணிப்பு இடைநிறுத்தப்பட்ட நிலையில் பஸ் போக்குவரத்து இல்லாததால் பெரும் அசௌகரிய நிலை ஏற்பட்டது.

குடாநாடு முழுவதும் பஸ் சேவைகள் ஸ்தம்பிதம் அடைந்ததைத் தொடர்ந்து யாழ்பரணம் ஓ.எல்.ஆர்.தேவாலயத்தில் உயர் அதிகாரிகள் மட்டத்தில் சந்திப்பொன்று நடைபெற்றது. (10 ஆம் பக்கம் பார்க்க)

## திக்கத்தில் கிளைமோர் சிப்பாய்பலி;இருவர் காயம்

(துன்னாலை)

திக்கம் மானாண்டி சந்தைக்கு அருகில் இராணுவத்தினரை இலக்குவைத்து மேற்கொள்ளப்பட்ட கிளைமோர்த்தாக்குதலில் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார்.மேலும் இருவர் படுகாயமடைந்தனர்.

துவிச்சக்கர வண்டியில் உணவுவிநியோகிப்பதில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினரே இத் தாக்குதலில் சிக்கியுள்ளனர். இதனையடுத்து அவ் வீதியூடாகச் சென்ற வான் ஒன்றின் உத வியுடன் காயமடைந்த இராணுவத்தினர் பலாலி இராணுவ மருத்துவ மனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

பனைவடலி ஒன்றில் பொருத்திவைக்கப் பட்டிருந்த கிளைமோரே வெடித்துள்ளதாக இராணுவத் தரப்புத் தகவல்கள் தெரிவித்தன. இதேவேளை இச் சம்பவம் இடம்பெற்று சில மணி நேரத்தில் அல்வாய் மாலுசந்தியில் கடமையில் இருந்த இராணுவத்தினர் மீது இனந்தெரியாதோரால் துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. இதனையடுத்து இராணுவத்தினர் பதில் தாக்குதல் நடத்தியுள்ளனர். (ச-15,101,132)

# சமாதான நடவடிக்கைகள் குறித்து சியாம்சரண்-ஜனாதிபதி பேச்சு

## இந்தியாவின் பங்கு குறித்தும் ஆராய்வு

(கொழும்பு)

இலங்கையின் சமாதான முன்னெடுப்புக்கள் குறித்து , இந்திய வெளியுறவுத்துறைச் செயலர் சியாம்சரணுடன் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

நேற்றுக் காலை திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டு கொழும்பு வந்த சியாம்சரண் கொழும்பில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை அலரிமாளிகையில் சந்தித்து இலங்கையில் தற்போது ஏற்பட்டிருக்கும் சூழ்நிலை உட்பட பல விடயங்கள் குறித்து கலந்தாலோசித்ததாக ஜனாதிபதி அலுவலக உயர் வட்டாரங்கள் தெரிவித்தன.

(10 ஆம் பக்கம் பார்க்க)



## பணிப்புறக்கணிப்பு இடைநிறுத்தத்தால் செயற்பாடுகள் வழமைக்கு திரும்பின

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்தக்கோரி அரச ஊழியர்களினால் மேற்கொள்ளப்பட்ட பணிப்புறக்கணிப்பு நேற்று இடைநிறுத்தப்பட்டதையடுத்து நேற்று அரச அலுவலகங்கள் அனைத்தும் செயற்படத் தொடங்கியுள்ளன.

வங்கிகள் அனைத்தும் நேற்று திறக்கப்பட்டு சேவைமேற்கொள்ளப்பட்டது. சில நாட்களாக வங்கிகள் பூட்டப்பட்டிருந்து நேற்று திறக்கப்பட்டதால் அதிகளவான வாடிக்கையாளர்கள் சென்றிருந்தனர்.

செயலகம் ,பாடசாலை ,பிரதேசசெயலகங்கள் என்பனவும் நேற்று செயற்பட்டன. பாடசாலைகளில் ஆசிரியர்கள் சென்றிருந்த போதிலும் மாணவர்களின் வருகை குறைவாகவே இருந்தன.

அரச செயலகங்கள் பாடசாலைகள் என்பன இன்று முழுமையாக செயற்பட ஆரம்பிக்கும் என தெரிவிக்கப்பட்டது. வங்கிச் செயற்பாடுகள் ஓய்வூதியங்கள் பெறுவோர் தமது ஓய்வூதியங்களை குறிப்பிட்டதினத்தில் பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. (து-133)

## கிளைமோர்த் தாக்குதலில் திருமலையில் ஏழு பேர் பலி

### 14 பேர் படுகாயம்

(திருகோணமலை)

திருகோணமலையில் நேற்று இடம் பெற்ற கிளைமோர்த்தாக்குதலில் ஏழுபேர் கொல்லப்பட்டுள்ளனர். பதினான்கு பேர் படுகாயமடைந்துள்ளனர்.

திருகோணமலை அனுராதபுரம் சந்தியில் நேற்றுக்காலை 11.45 மணியளவில் இராணுவத்தினரால் ஓட்டோஒன்றை சோதனைக்குட்படுத்திய போது அதில் பொருத்தப்பட்டிருந்த கிளைமோர்க்குண்டு வெடித்ததாக தெரிவிக்கப்பட்டது.

பொலிஸ் காவலரணை இலக்குவைத்தே இத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இதில் சார்ஜன்ட் ,கான்ஸ்டபிள் தர பொலிஸார் இருவர் ,இராணுவத்தரப்பைச்சேர்ந்த மூவர் , ஊர்காவல் படையைச் சேர்ந்த ஒருவர் மற்றும் பொதுமகன் என எழுபேர் உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டது.

படுகாயமடைந்த 14 பேரும் திருகோணமலை பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். காயமடைந்தவர்களில் சிலர் ஆபத்தான நிலையில் கொழும்பு தேசிய மருத்துமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

இதேவேளை மட்டக்களப்பு காத்தான்குடி ,புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் அதிரடி படையினரை இலக்கு வைத்து நேற்றுக் காலை 6.45 மணியளவில் கிளைமோர்த் தாக்குதல் இடம்பெற்றது.


தமிழீழவிடுதலைப்புலிகளினால் மேற்கொள்ளப்பட்ட இந்தத் தாக்குதலில் இரண்டு அதிரடிப்படையினர் (10 ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே
கணனிக் கல்விப் பகுதி




# உலகக் கிண்ண உதைபந்தாட்டம் ஜேர்மனி 2006

## ஜேர்மனியா, இத்தாலியா இறுதிப் போட்டிக்கு? இரு அணிகளும் இன்று அரையிறுதியில் மோதல்


குளோஸ்

காலிறுதி ஆட்டங்களின் முடிபில் ஜாம்பவான் அணிகளான பிரேசில், ஆர்ஜன்டீனா, இங்கிலாந்து மற்றும் புது முகமான உக்ரைன் ஆகிய அணிகள் வெளியேற்றப்பட்டன.

ஜேர்மனி,இத்தாலி, போர்த்துக்கல், பிரான்ஸ் ஆகிய ஐரோப்பிய கண்டங்களைச் சேர்ந்த நான்கு அணிகள் அரையிறுதியில் மோதுகின்றன. பரபரப்பான அரையிறுதி ஆட்டங்கள் இன்று ஆரம்பமாகின்றன.

இன்று நடைபெறும் அரையிறுதி ஆட்டத்தில் ஜேர்மனி–இத்தாலி அணிகள் மோதுகின்றன. இந்தஆட்டம் டார்ட்மன்ட் நகரில் இலங்கை நேரப்படி நள்ளிரவு 12.30 மணிக்கு ஆரம்பமாகின்றது.

போட்டியை நடத்துவதால் சம்பியன் பட்டம் வெல்லும் வாய்ப்பு உள்ளதாக கருதப்படும் ஜேர்மனி லீக் ஆட்டத்தில் கோஸ்டாரிகாவை 4–2 கணக்கிலும் போலந்தை 1–0 என்ற கணக்கிலும் ஈக்வடாரை 3–0 என்ற கணக்கிலும் தோற்றகடித்தது.

இரண்டாவது சுற்று ஆட்டத்தில் சுவீடனை 2–0 என்ற கணக்கில் வீழ்த்தியது. காலிறுதியில் பலம் வாய்ந்த ஆர்ஜென்டீனாவை பெனால்டி ஷூட் அவுட் முறையில் 4–2 என்ற கோல் கணக்கில் தோற்கடித்து அதிர்ச்சி கொடுத்தது.

காலிறுதி ஆட்டத்தில் ஆர்ஜென்டீனாவை வீழ்த்துவதற்கு ஜேர்மனி கோல் கீப்பர் ஜென் லெக்மன் காரணமாக இருந்தார்.

அவர் பெனால்டி ஷூட் அவுட்டின்போது ஆர்ஜென்டீனா வீரர்களின் கோலடிக்கும் முயற்சிகளைத் தகர்த்தார். அவர் அணிக்கு தூண்போல் விளங்குகிறார். மேலும் ஜேர்மனி அணியின் முன்களமும் நடுக்களமும் சிறப்பாகவுள்ளது.

மூன்று முறை சம்பியன் பட்டம் வென்ற இத்தாலி அணி லீக் ஆட்டங்களில் சாதாரண அணிகளான கானா, செக் குடியரசு ஆகிய அணிகளைத் தோற்கடித்து அமெரிக்காவுடனான ஆட்டத்தை சமநிலை செய்தது. இரண்டாவது சுற்று ஆட்டத்தில் அவுஸ்திரேலியாவை வென்றது.

அதேபோல் காலிறுதியில் அனுபவமே இல்லாத உக்ரைனை வீழ்த்தியது. இதனால் இத்தாலி அணி பலம் வாய்ந்தது எனக் கூறி விட முடியாது. ஜேர்மனி அணியுடன் ஒப்பிடும்போது இத்தாலி சற்று பலவீனமானது தான்.

1954 மற்றும் 1974 ஆண்டுகளில் சம்பியன் பட்டம் பெற்ற ஜேர்மனி தற்போது பலமாகவுள்ளது. அந்த அணியின் தலைவர் பல்லாக், குளோஸ், போடோல்ஸ்கி ஆகியோர் நம்பிக்கை நட்சத்திரமாகத் திகழ்கின்றனர்.

இத்தாலி அணியின் வீரர் டோனி உக்ரைனுக்கு எதிரான ஆட்டத்தில் 2 கோல் அடித்து அணி வெற்றி பெறுவதற்கு வித்தாக விருந்தார்.

இத்தாலி அரையிறுதிக்கு எளிதாக முன்னேறினாலும் ஜேர்மனி இன்று ஆட்டத்தில் சற்று நெருக்கடி கொடுக்கும் எனத் தெரிகின்றது. அந்த அணி இந்த உலகக் கோப்பையில் அனுபவம்வாய்ந்த அணியுடன் இன்னும் மோதவில்லை.

அப்படி ஒரு ஆட்டம் நடந்திருந்தால் இத்தாலியுடைய நிலை எப்படி என்பது தெரிந்திருக்கும். அந்த அணியின் தலைவர் டோடி, டோனி, நெஸ்டா, அலெக்சான்ட்ரா, மின்சென்ட்சோ, சம்பர்ட்டோ ஆகியோர் நம்பிக்கை வீரர்களாகத்திகழ்கின்றனர்.

சம்பியன் பட்டம் வெல்லும் என்று எதிர் பார்த்த அணிகள் எல்லாம் வெளியேறி வருகின்றன. இதனால் இன்றையஆட்டத்தில் ஜேர்மனிக்கு அந்த நிலை ஏற்பட்டு விடுமோ என்ற ஒரு வித கலக்க நிலையும் உருவாகியுள்ளது.


டோனி

எப்படியோ ஜேர்மனி இறுதிப் போட்டிக்கு தகுதி பெறுமா என்பது இன்று தெரிந்து விடும். இத்தாலியும் ஜேர்மனியும் இதுவரை 13 முறை மோதியுள்ளன. இதில் இத்தாலியே அதிகளவில் ஆதிக்கம் செலுத்தியுள்ளது. இந்த அணி 5 முறை வெற்றி பெற்றுள்ளது. மூன்று முறை தோற்றுள்ளது. 5ஆட்டங்கள் சமநிலையில் முடிந்தது.

## அணித் தலைமைப் பதவியிலிருந்து டேவிட் பெக்கம் இராஜினாமா

இங்கிலாந்து உதைபந்தாட்ட அணியின் பதவியிலிருந்து டேவிட் பெக்கம் விலகிக் கொண்டார்.

கடந்த 6 ஆண்டுகளாக இங்கிலாந்து அணிக்கு அவர் தலைமை தாங்கி வந்தார். ஞாயிற்றுக்கிழமை பத்திரிகையாளரைச் சந்தித்த அவர் தனது இராஜினாமா குறித்த அறிக்கையை கண்ணீருடன் வாசித்தார்.

அதில் புதிய அணித் தலைவருக்கும் புதிய மேலாளருக்கும் உதவிசெய்ய ஆர்வமாக இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தனது அறிக்கையில் அவர் மேலும் கூறியிருப்பதாவது,

கடந்தசிலமாதங்களுக்குமுன்பேநான் அணித் தலைவர் பதவியிலிருந்து விலகும் முடிபுக்கு வந்து விட்டேன்.

உலகக் கோப்பையை இங்கிலாந்துக்கு வெற்றிப் பரிசாக அளித்து விட்டு கௌரவத்துடன் வெளியேற எண்ணியிருந்தேன். ஆனால் அது இல்லாமல் போய்விட்டது.



உதை பந்தாட்டத்திலிருந்து விலகுவது என்பது எனக்கு கடினமான முடிபுதான். எனினும் எனது குடும்பத்தினருடனும் நண்பர்களுடனும் நன்கு ஆலோசித்த பின்னரே அணித் தலைவர் பதவியை இராஜினாமா செய்கின்றேன்.

நான் ஓய்வு பெறுவதற்கு இதுவே சரியான நேரம் ஆகும் என்று பெக்கம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## சிவப்பு அட்டை விவகாரம்




போர்த்துக்கலுக்கு எதிரான காலிறுதி ஆட்டத்தில் இங்கிலாந்து வீரர் ரூனிக்கு சிவப்பு அட்டை வழங்கப்பட்டது.

அவர் போர்த்துக்கலின் ரிக்கார்டோ கார் வல்கோவை தாக்கியதற்காக நடுவர் சிவப்பு அட்டை கொடுத்தார்.

பொதுவாக வீரரைத் தாக்கினால் பெனால்டிதான் வழங்கப்படும். ஆனால் இம் முறை சிவப்பு அட்டை வழங்கப்பட்டுள்ளது. இது குறித்து விசாரணை வழங்கப்படும் என 'பிபா' அறிவித்துள்ளது.

## 'எங்களது வெற்றி தொடரும்' பிரான்ஸ் அணித் தலைவர் ஜீடேன்



எங்களது வெற்றி தொடரும் என்று பிரான்ஸ்அணியின்தலைவர் ஜீடேன் கூறினார். உலகக் கோப்பை உதைபந்தாட்ட போட்டியின் காலிறுதி ஆட்டத்தில் நடப்பு சம்பியன் பிரேசிலை வீழ்த்தியது குறித்து பிரான்ஸ் அணியின் தலைவர் ஜீடேன் கூறியதாவது,

பிரேசிலுடன் வலிமை மிக்க ஆட்டத்தை சந்திக்க நினைத்தோம். அதற்கு ஏற்றால் போல் இந்த ஆட்டத்தில் சிறப்பாக ஆடினோம். வெற்றிக்காக அனைவரும் இணைந்து கடுமையாக உழைத்தோம். எங்கள் அணியினரின் கடின உழைப்புக்குக் கிடைத்த மிகப் பெரிய வெற்றி இதுவாகும்.

இந்த வெற்றி எங்களுக்குக் கிடைக்க வேண்டிய வெற்றிதான். இந்த வெற்றி மிகுந்த மகிழ்ச்சியைத் தந்துள்ளது. அரை இறுதியில் வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்கு முன்னேறமுயற்சிப்போம். எங்களது வெற்றி தொடரும் என்று ஜீடே கூறினார்.



***நட்சத்திரம் தியரி ஹென்றி***

பிரான்ஸ் அணியின் வெற்றிக்கான கோலையடிக்க அந்த அணியின் நட்சத்திர வீரர் தியரி ஹென்றி கூறுகையில்,

பிரேசிலுக்கு எதிரான ஆட்டத்தில் சிறப்பாக ஆடினோம். யாரிடமும் இருந்து நாங்கள் எதையும் பறிக்கவில்லை.

பிரேசிலுக்கு எதி ராக எப்படியாட வேண்டுமென வியூகம் அமைத்திருந்தோம். அதன்படி ஆடி தற்போது வெற்றி பெற்றுள்ளோம் என்றார்.

## நடுவரினால் தண்டிக்கப்பட்டதில் போர்த்துக்கல் முதல் இடம்

உதைபந்தாட்டத்தைப் பெறுத்தவரையில் விதிமுறைக்கு மாறாக தாக்குதல் ஆட்டத்தில் ஈடுபடும் வீரர்களுக்கு போட்டி நடுவர் எச்சரிக்கை விடுக்கும் விதத்தில் அட்டைகளைக் காட்டுவார்.

அது மஞ்சள் மற்றும் சிவப்பு நிறத்திலிருக்கும். போட்டி நடுவரால் அட்டை காட்டப்படும் வீரர்கள் உடனடியாக மைதானத்திலிருந்து வெளியேற்றப்படுவார்கள்.

அது மட்டுமல்லாமல் அடுத்த ஆட்டத்தில் ஆடும் வாய்ப்பையும் அவர் இழப்பார். இந்த உலகக் கோப்பையில் காலிறுதி ஆட்டங்களின் முடிபில் அதிக முறை அட்டைகளைப் பெற்றுள்ள அணியில் போர்த்துக்கல் முன்னிலையில் உள்ளது.

அந்த அணிவீரர்கள் இதுவரை 20 மஞ்சள் அட்டைகளையும் 2 சிவப்பு அட்டைகளையும் பெற்றுள்ளனர். போர்த்துக்கலுக்கு அடுத்து கானா 18 மஞ்சள் அட்டைகளையும் ஒரு சிவப்பு அட் டையையும் பெற்றுள்ளது.

போலாந்து 16 மஞ்சள் அட்டைகளையும் 2 சிவப்பு அட்டைகளையும் செர்பியா 12 மஞ்சள் அட்டைகளையும் 2 சிவப்பு அட்டைகயையும் பெற்றுள்ளது.

அமிர்தன்

## ஜேர்மனி வீரர்களுக்குப் பரிசு

ஜேர்மனி அணி அரை இறுதியில் நுழைந்ததற்காக அந்த அணித்தலைவர் பல்லாக் மற்றும் சக வீரர்களுக்கு ரூபா 10 கோடியை பரிசாக அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது.

# இளைஞர்களின் சேட்டுக்களை கழற்றி படையினர் சோதனை?

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் படையினர் சோதனை நடவடிக்கைகளின் போது இளைஞர்களின் சேட்டுக்களை கழற்றி சோதனைகளை மேற்கொள்கின்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

குடாநாட்டில் படையினர் சகல இடங்களுக்கும், சென்று மூலை முடக்குகள் எல்லாம் இறுக்கமான சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றமை தெரிந்ததே.

இளைஞர்களை சோதனையிடும் படையினர் சேட்டுக்களை கழற்றி சோதனையிடுகின்றதாக கூறப்படுகின்றது.

இதன்போது இளைஞர்களின் காயங்களுக்கான வடுக்கள் இருந்தால் அந்த இளைஞர்களை கடும் சோதனைக்குள்ளாக்குவதுடன் தீவிரமானவிசாரணையையும் படையினர் மேற்கொள்கின்றதாக தெரியவருகிறது. அண்மையில் வட்டுக்கோட்டைப் பகுதியில் இவ்வாறு இளைஞர் ஒருவரை சேட்டைக் கழற்றி சோதனை செய்ததாகவும் அவரது உடம்பிலிருந்த காயங்களைப்பார்த்து நீ எல்.ரி.ரி. தானே எனக்கூறி கைது செய்ய முற்பட்டனர் என்றும் கூறப்படுகிறது. (க-7)

# விண்ணப்பம் கோரல்

(கொழும்பு)

கொழும்பு பல்கலைக் கழகத்தின் அனுசரணையுடன் தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தினால் இலங்கையில் முதன் முதலில் சமூகப் பணி மாணிப் பட்டக் கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஆங்கில மொழி மூலம் நடத்தப் படவுள்ள இக் கற்கை நெறிக்கு 2000 ஆம் ஆண்டு முதல் 2005 ஆண்டு வரையான க.பொ.த உயர்தரப்பரீட்சையில் சித்தியடைந்து, பல்கலைக்கழக அனுமதிக்கு தகமை பெற்ற மாணவர்கள் விண்ணப்பிக்க முடியும் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

நான்கு வருட முழு நேரப் பயிற்சி நெறியினை உள்ளடக்கியே ப் பட்டப் படிப்புக் கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பதாரிகள் எதிர்வரும் 7 ஆம் திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பங்களுடன் சமூக அபிவிருத்தி நிறுவனம், கொழும்பு-7 எனும் முகவரியுடன் தொடர்பு கொள் ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (க-9)

# செயலமர்வும் களப்பயிற்சியும்

தென்மராட்சி பகுதியில் செயல் திறன் அரங்க இயக்கத்தினரால் நடத்தப்பட்டு வரும் மாலைநேர வகுப்புக்களில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான மாதாந்த செயலமர்வும் களப்பயிற்சியும் நேற்று ஆரம்பமாகி இன்றும் நடைபெறவுள்ளது.

எனவே மாலைநேர வகுப்பு ஆசிரியர்கள் அனைவரையும் இன்றைய தினம் இடம்பெறும் செயலமர்வில் தவறாது கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (க-21)

# மனிதனின் சகல செயற்பாடுகளையும் பதிவு செய்யும் புதிய திட்டம் அமுலுக்கு!

நீங்கள்வாழ்வில்பார்ப்பது, கேட்பது, பேசுவது என என்னென்ன செய்கிறீர்களோ அவை அனைத்தையும் பதிவுசெய்யும் பணி 15 ஆண்டுகளில் துவங்கிவிடும் அவ்வாறு பதிவு செய்யப்பட்டவற்றில் இருந்து தேவையானதை சில நொடிகளில் தேடிக் கண்டு பிடிக்கும் வசதியும் ஏற்படுத்தப்பட்டு விடும் என் கிறார் கோர்டன் பெல் என்ற விஞ்ஞானி.

இவர் மைக்ரோசாப்ட் நிறுவனத்தில் ஆய்வு பிரிவில் பணியாற் றுபவர். 1998 ல் ''பெல் மைலைப் பிட்ஸ்'' என்ற திட்டத்தை துவங்கினார். இதன்படி இவர் கழுத்தில் மாட்டப்பட்டிருக்கும் ''சென்ஸ் கேம்'' என்ற சென்சிடிவ் கமரா, பெல் எதையெல்லாம் வாசிக்கிறாரோ, பேசுகிறாரோ , பாடுகிறாரோ அவற்றையெல்லாம் பதிவு செய்து விடும்.

இன்னும் 15ஆண்டுகளில் நம்மை சுற்றி நடக்கும் எல்லாம் நம் அனுமதியின்றியே பதிவு செய்யப்பட்டு நமக்கு அதன் பிரதியும் தரப்படும். நாம் அவற்றில் தேவையான எதையும் நொடிப்பொழுதில் தேடி எடுத்துக் கொள்ள முடியும்.

நம்பகமான, ஒரு உதவியாளரைப்போல இந்தப் பதிவுகள் யாவும் நம்முடனே வரும் .நாம் கேட்கும் போது, தகவலை எடுத்து தரும். எதையும் நினைவில் வைக்க வேண்டுமே என்ற கவலை இல்லாமல் நிம்மதியாக வாழலாம் தவிர இது சுதந்திரத்தையும் அளித்து நமது பணி சுமையையும் குறைக்கிறது என்கிறார் பெல்.

கொலம்பியா பல்கலைக் கழக விஞ்ஞானிகளின் உதவியுடன் நிறைவேற்றப்படும் இந்த திட்டத்தில் நொடிப்பொழுதில் தேவையான விஷயங்களைத் தேடி எடுப்பது சுலபமாக்கப்படும் என்கிறார் கோர்டன் பெல். (க)

# கணனிப் பயிற்சி மீண்டும் ஆரம்பம்

யாழ்ப்பாணம்பிராந்தியஆணையாளர் அலுவலகத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் ஐ.ரி.பாக் கணனிப் பயிற்சி நிலையத்தில் நடைபெற்று இடைநிறுத்தப்பட்ட அரசாங்க அலுவலர்களுக்கான கணனிப் பயிற்சிநெறி மீண்டும் இன்று செவ்வாய்க்கிழமை தொடக்கம் ஆரம்பமாகி வழமைபோல் நடைபெறும். (க)




படங்கள் : திலீவின்பன்

இ.போ.சபை ஊழியர்களின் பகிஷ்கரிப்பால் வெறிச்சோடிக் கிடக்கும் மத்திய பேருந்து நிலையம்.




முண்டியடித்துக் கொண்டு தனியார் பஸ்ஸில் ஏறும் பயணிகள்




பணிப்புறக்கணிப்பு கைவிடப்பட்டதால் வங்கிகளில் குவிந்திருக்கும் வாடிக்கையாளர்கள்

## மணி பல்லவத்தில் மஹோற்சவம்



## நயினை நாகபூஷணி அம்மன் பாமாலை

## இன்று ஒன்பதாம் திருவிழா

### கமலத் திருவே!

சிறக்கும் கமலத்திருவே ! நின்
சேவடி சென்னி வைக்கத்
துறக்கம் தரும் நின்துணைவரும்
நீயும், துரிய மற்ற
உறக்கம் தரவந்து, உடம்போடு
உயிர் உறவு அற்று அறிவு
மறக்கும் பொழுது என் முன்னே
வரல் வேண்டும் வருந்தியுமே

அபிராமி அந்தாதி

### உன்னை நினைத்தால் வாழலாம்

கடல் நடுவே ஆட்சி செய்யும் பூஷணியே
கடைக் கண்ணால் நீயொருக்கால் பாருமடி
படமெடுத்து ஆடுகின்ற பாம்புகளை
படையணியாய் கொண்டவளே பூஷணியே
இடமொன்று எமக்கிங்கே வேண்டுமடி
இந்நாட்டில் அமைதியுடன் வாழ்வதற்கு!
தடல் புடலாய் நடக்கின்ற யுத்தமதை
தரணியிலே நிறுத்திவிடு நாயகியே
உடனடித் தீர்வுக்கு வழிகாட்டு
உகந்த தோர் வாழ்வுக்கு அருள் கூட்டு
திடமாக உனை நம்பி வாழ்கிறோமடி
தீர்வதனை விரைவினிலே சேர்ப்பாயென்று
விடையவனுடன் உடனுறையும் நாயகியே
வேண்டுவார்க்கு வேண்டுவதை அளித்துவிடு!

-மதுரகவி -

### வழிகாட்டம்மா

நாகமதில் வீற்றிருக்கும் நாகம்மை
நர்த்தனங்கள் ஆடிவரும் நாகேஸ்வரி
நாதத்தின் சுருதியே நீ தானம்மா
நலமாக நாம் வாழ வழிகாட்டம்மா

க.பபிதாரகா கொக்குவில்

### நாகதேவியே

நயினை ஆழி வீற்றிருக்கும் நாகதேவியே
நயங்கள் பல செய்திடுவோம் வீரதேவியே
பஜனை பாடி பணிந்திடுவோம் பக்ததேவியே
பாருமம்மா பாவிகளின் நிலையை நாளுமே !

ஆடுகின்ற ஆழியிலே அவலம் நாளுமே
சூழுகின்றதுன்பந்தனை போக்கிடுவாயேஉனை
தேடிவரும் அடியவர்கள் துயரம் நீக்குவாய்
தேவியுடைபணிந்தவர்க்கு அருள் அருளுவாய்!

சுகந்தினி முருகேசு அச்சுவேலி தெற்கு

### தீருமே பாவமெல்லாம்

மூவுல களந்த மூர்த்தி
முகுந்தனின் உடன் பிறப்பே!
தீவகம் த்ன்னில் தோன்றி
தீவினை நீக்கி வைத்தாய்
பாவினால் உன்னைப் பாடும்
பாக்கியம் என்னைத் தேட
தேவி நின் கடைக்கண் பார்வை
தீர்க்குமே பாவ மெல்லாம்

கவிமணி கந்தமுருகேசதாசனார்

### ஆர்வமொடம்மனை அருச்சனை நயினையில்

தேர்மிசை அம்மன் தெருவில் வரக்கண்டு
நாரியர் நசையால் நயக்க நளினம்
பார்தனில் படநாகம் படர்சிறை மயிலென
ஆர்வமொ டம்மனை அருச்சனை நயினையில்

சிவ:சண்முகவடிவேல்

## இன்று ஒரு தகவல்

# போலிச் சாமியார்கள்

ஒரு ஊரில் இரண்டுபேர் இருந்தார்கள். ஊரை ஏமாற்றி பணம் சம்பாதிப்பதற்கு என்ன வழி என்று யோசித்தார்கள். சுலபமாக ஒரு வழி தெரிந்தது. அதன்படி இருவரும் சாமியார் வேஷம் போடுவதென்று தீர்மானித்தார்கள் போலிச்சாமியார்கள்.

ஒரு கோயிலில் போய் உட்கார்ந்து கொண்டார்கள் இரண்டு பேரும் திட்டம் போட்டு ஒரு சேதியை ஊர்முழுவதும் பரப்பிவிடடார்கள் அதாவது இந்தமாதம் 18ஆம் திகதி இந்த ஆலயத்தில் ஒரு பெரியமகான் தோன்றி காட்சிகொடுக்கப் போகிறார். மக்கள் அதைப் பார்க்கலாம் நமது குறைகளை அந்த மகான் தீர்த்துவைப்பார் என்று ஒரு அறிவிப்பு கொடுத்து விட்டார்கள் சுவரொட்டிகளை அச்சடித்து ஊர்முழுவதிலும் உள்ள சுவர்களில் ஒட்டினார்கள்.

மக்களும் மிகவும் பயபக்தியோடு மகானைத் தரிசிக்கக் காத்திருந்தார்கள். எப்போது அந்த 18 ஆம் திகதி வரும் என்று இது இப்படி இருக்க பக்கத்து ஊரில் உள்ள ஜெயலிருந்து இரண்டுகைதிகள் 17ஆம் திகதி இரவு சுவரேறிக்குதித்து தப்பி விட்டனர். பொலிஸ் அவர்களைத் துரத்துகிறது. அந்த இரண்டு பேரில் ஒருவன் ஒரு தோப்பு வழியாக ஒடிவருகிறான் வரும் வழியில் ஒரு கட்டில் காலியாகக் கிடந்தது. உடனே அதில் சடாரென்று காலை நீட்டிப் படுத்துக்கொண்டு அங்கிருந்த போர்வையை எடுத்து உடலை மூடிக்கொண்டான் அந்தக் கட்டில் ஒரு பிச்சைக்காரனுடையது. அவனுக்கு ஒரு கால் கிடையாது அவன் எங்கேயோ பிச்சையெடுக்கப்போயிருக்கிறான். இந்த சமயம் பார்த்து இந்தக் கைதி அதில் போய்ப்படுத்துக்கொண்டான்.

துரத்திக்கொண்டுவந்த பொலிஸ்காரர்கள் அருகில்வந்து பார்த்தார்கள் சரி பிச்சைக்காரன்தான் படுத்திருக்கிறான் போலிருக்கிறது என்று நினைத்துக்கொண்டு போய் விட்டார்கள். தப்பியோடிய இன்னொரு கைதி கோவிலுக்குள் போய் நுழைந்துவிடடான். ஒரே இருட்டு மூலையில் போய்வசதியாக உட்கார்ந்து கொண்டு திருப்பிப் பார்த்தால் ...அங்கே இவனை மாதிரியே இன்னொருவன் உட்கார்ந்திருக்கிறான் "யார் நீ?" என்று விசாரிக்கிறான் அதற்கு அந்த ஆசாமி நான் வந்து இந்தக் கோயிலில் இருக்கும் பெரிய சாமியாரின் மச்சான் நாளை காலையில் நான்தான் இந்த ஊர் மக்களுக்கு மகானாகக் காட்சிகொடுக்கப் போகிறேன் .அதற்காகத்தான் ஊரிலிருந்து என்னை அழைத்துக் கொண்டு வந்து இங்கே உட்கார வைத்திருக்கிறார்கள் என்கிறான்.

கைதிபார்த்தான் இவனுக்குப் பதிலாக நானே மகானாகக் காட்சிகொடுத்தால் என்ன என்று யோசித்தான். அவனை இரவோடிரவாக விரட்டிவிட்டு இவன் அங்கே தயாராக இருந்து கொண்டான். மறுநாள் காலை மகானைப் பார்ப்பதற்கு ஆயிரக் கணக்கான மக்கள் கோவிலுக்கு முன் உள்ள திடலில் கூடியிருந்தார்கள்.

நமது சிறைக் கைதி மகான் வேஷத்தில் மெதுவாக வெளியே வந்தார். சாமியார் பார்த்தார் இது நாம் தயாரித்த ஆள் மாதிரி தெரியவில்லையே என்னவோ நடந்திருக்கிறது என்பதைப் புரிந்து கொண்டார். இருந்தாலும் என்ன செய்யமுடியும்? திருடனுக்குத் தேள்கொட்டியது மாதிரி கம்மென்று இருந்துவிட்டார் இதற்குள் கூட்டம் முட்டிமோதிக்கொண்டு முன்னால் வந்தது.

பெரியசாமியார் மக்களைப் பார்த்துக்கத்தினார் மகான் தோன்றிவிட்டார் எல்லோரும் அவரை வணங்குங்கள் என்றார். எல்லோரும் குப்புறவிழுந்து கும்பிட்டார்கள். இன்னொருசாமியார் மெதுவாக அந்த மகானிடம் வந்து ஏதாவது அற்புதம் நிகழ்த்துங்கள் மக்கள் உங்களின் சக்தியைப் புரிந்து கொள்ளட்டும் என்றார். இப்போது இவனுக்குத் தோற்கொட்டியது போலாகிவிட்டது. திருதிருவென்று விழிக்க ஆரம்பித்தான். கூட்டத்தைப் பார்த்தான். இவனுடன் தப்பித்த இன்னொரு கைதி கால் இழந்த பிச்சைக்காரன் வேஷத்தில் அங்கே நின்றான் உடனே இவன் ஒரு ஐடியா செய்தான். ஓ கால் இல்லாத மனிதனே உனது ஊனத்தைச் சரி செய்யட்டுமா ? என்றான்.

அது என் பாக்கியம் என்று சொல்லி அவன் அருகில் வந்தான். உன் கால்கள் சரியாகப் போகக்கடவது என்றான. உடனே அவன் காலை உதறிக்கொண்டு நடக்க ஆரம்பித்துவிட்டான். மக்கள் ஆச்சரியப்பட்டுப் போய்விட்டார்கள் அதன்பின் நிறையப்பேர் மகானைத் தேடிவர ஆரம்பித்தார்கள். ஒரு நாள் பெரிய சாமியார் இந்த மகானிடம் நிறைய பணம் கொடுத்துதன் மகளையும் அவருக்குத் திருமணம் செய்து கொடுத்து இருவரும் எங்காவதுபோய் நலமாக இருங்கள் எனக்கூறி அனுப்பிவைத்தார். அந்த ஆளும் இதுதான் சந்தர்ப்பம் என்று ஓடிப்போய் விடடான்.

அவன் போன பின்பு இந்த போலிச்சாமியார் மக்களிடம் அந்த மகான் திடீரென்று மறைந்து விட்டார் என்று கூறி அவரது படங்களை அச்சடித்து விற்க ஆரம்பித்தார். அந்த வியாபாரமும் அமோகமாக நடந்ததாம். மூடநம்பிக்கைகள் இப்படித்தான் பரவுகின்றன என்பதற்கு இது ஒரு உதாரணம்.

பெரியார் 1932 இல் ரஷ்யாவுக்குப் போயிருந்தார். அங்கே சில ரஷ்ய நாடகங்களைப் பார்த்தார். அவருக்குப் பிடித்த நாடகத்தின் கதைதான் இது மனிதனுக்குத் தன்னம்பிக்கை எந்த அளவுக்கு குறைவாக இருக்கிறதோ அந்தளவுக்குப் பயம் அதிகமாக இருக்கும். மூடநம்பிக்கைகள் பரவ மனித பலவீனங்கள் தான் காரணம்.

ஒரு ஊரில் பெரியவர் எல்லோருக்கும் ஆரூடம் சொல்லிக் கொண்டிருந்தார். பாவம் செய்பவர்களுக்குப் பரிகாரமும் சொல்வார். அவரிடம் ஒருவன் வந்தான் ஐயா நான் ஒரு பெண்ணை அவளது அப்பாவுக்குத் தெரியாமல் அழைத்துக்கொண்டுபோய் திருமணம் செய்துகொண்டேன். நான் செய்ததுபாவம் என்றால் அதற்குப் பரிகாரம் என்ன? என்று கேட்டான்.

இது பாவம் இல்லை அந்தப் பெண்ணின் தந்தையை இங்கே அழைத்துக்கொண்டுவா நான் பிரச்சினையைத் தீர்த்து வைக்கிறேன் என்றார் அவர். அதிலும் ஒரு பிரச்சினை இருக்கிறது என்றான். அவன் என்னபிரச்சினை என்றார். அந்த அப்பாவே நீங்கள் தானே என்கிறான் இவன்.

தென்கச்சீ கோ. சுவாமிநாதன்

# எரிபொருள் பிரச்சினையை தீர்க்க மாற்று ஏற்பாடுகள்

(கொழும்பு)

தினசரி அதிகரித்து வரும் எரிபொருள் விலை உயர்வுக்கு முகம் கொடுக்கும் நோக்கில் மாற்று எரிபொருள் மூல வளங்களைபெற்றுக்கொள்வது குறித்து இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் கவனம் செலுத்தி வருகின்றது.

இது தொடர்பாக பல ஆய்வுகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஜாரிய மெதகம தெரிவித்துள்ளார்.

எரிபொருள் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக உலகில் பல நாடுகள் மாற்றுத் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றன.

அமெரிக்கா ,பிறேசில், ஆர்ஜன்ரீனா, இந்தியா ஆகிய நாடுகள் போக்குவரத்திற்கான சக்தியாக எந்நோலை பாவிப்பதற்கு பல ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றது.

ஆர்ஜன்ரீனா சிறிய விமானங்களுக்கு இந்த எந்நோல் வளத்தை பாவித்து எனைய நாடுகளுக்கு முன் மாதிரியாக திகழ்ந்துள்ளது. இதேவேளை எண்ணெய்யையும் மாற்று எரிபொருள் வளமாக பயன்படுத்த முடியுமா என்பதில் விஞ்ஞான ரீதியான ஆய்வுகளை மேற்கொள்வதில் கூட்டுத்தாபனம் பல சிரமங்களை எதிர்கொள்ளுகின்றது.

இதேவேளை, முச்சக்கரவண்டிகளுக்கு செறிவு குறைவான பெற்றோலை பாவிப்பதற்கான திட்ட மொன்றை பொற்றொலியக் கூட்டுத்தாபனம் அறிமுகப்படுத்தவுள்ளது.

தெரிவு செய்யப்பட்ட 5 முச்சக்கரவண்டிகளில் இந்த செறிவு குறைவான பெற்றோலைப் பாவித்து பரிசீலிக்கும் நடவடிக்கை இன்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

இந்தப் பெற்றோல் வகையின் பரிசோதனை வெற்றியளித்தால் குறைவான விலையில் அது வழங்கப்படுமென்று கூட்டுத்தாபனத்தின் தலைவர் உறுதியளித் தார். (து-9)

# புடவை வியாபாரியை காணவில்லையாம்!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் தங்கியிருந்த தமிழ்நாட்டைச் சேர்ந்த புடவை வியாபாரியான சங்கரவேல் மெய்யப்பன் (வயது 35) என்பவரை காணவில்லை என்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த யூன் 27ஆம் திகதி முதல் மெய்யப்பனைக் காணவில்லை என்று அவரது சகோதரர் சங்கரவேல் ராஜ்குமார் மட்டக்களப்பு பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

கடந்த மே மாதம் புட்வை வியாபாரி ஒருவர் வாழைச்சேனையில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் சடலமாகக் காணப்பட்டார்.

இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் துணை இராணுவக் குழுவினரால் தாங்கள் சித்திரவதை செய்யப்படுவதாக தமிழ்நாட்டுக் குத் தப்பிச் சென்ற சிலர் ஊடகங்களில் கருத்து தெரிவித்திருந்தனர்.

இந்த நிலையில் துணி புடவை வியாபாரியான மெய்யப்பனை துணை இராணுவக் குழுவினர் கடத்திச் சென்றிருக்கக் கூடும் என்று கூறப்படுகிறது. (க)

# தமிழ் மக்களுக்கு பயிற்சி வழங்கப்படுவது குறித்து பாலிதகோகென்ன கவலை !

(கொழும்பு)

தமிழ் மக்களுக்கு பயிற்சிகள் வழங்கப்படுவது குறித்து கவலைப்படுவதாக அரச சமாதான செயலகப் பணிப்பாளர் பாலித கோகென்ன தெரிவித்துள்ளார்.

சர்வதேச சமூகம் இதனை கவனத்தில் எடுக்கவேண்டும் என்றும் இத்தகைய பயிற்சிகளுக்கு தடை விதிக்க சர்வதேச சமூகம் முன்வரவேண்டும்என்றும்பாலிதகோகென்ன சர்வதேச ஊடகம் ஒன்றுக்கு கருத்து தெரிவித்துள்ளார்.



இதேவேளை, படையினர் மீதும் பொலிஸார் மீதும் தாக்குதல் நடத்த பொதுமக்க ளுக்குப் பயிற்சி அளிக்கப்படு வதாக இராணுவத்தினர் இரண்டாம் நிலைத் தளபதி நந்த மல்ல வராச்சி குற்றம் சாட்டியுள்ளார்.

அப்பாவி மக்களை வற்புறுத்தியே புலிகள் ஆயுதப் பயிற்சி வழங்கி வருவதாக அவர் குற்றம் சாட்டினார் . சிறுவர்கள் முதல் முதியவர் வரை இந்தப் பயிற்சி யில் வலுக்கட்டயமாக சேர்க்கப்படுகின்றனர் என்று அவர் சுட்டிக்காட்டினார். (க)

# சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

தம்பசிட்டி மாயக்கையம்பதி சித்தி விநாயகர் ஆலயத்தின் 4 ஆவது ஆண்டு மணவாளக்கோல விழாவும், 1008 சங்காபிஷேகமும் நாளை புதன்கிழமை நடைபெறவுள்ளது.

இன்று செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்கு சங்குஸ்தாபனம், யாக பூசை என்பன இடம்பெற்று நாளை புதன் கிழமை பகல்11 மணிக்கு சங்காபிஷேகமும் தொடர்ந்து மகேஸ்வர பூசையும் இடம் பெறும்

நாளை மாலை 5 மணிக்கு வசந்த மண்டப பூசை இடம் பெற்று விநாயப் பெருமான் வீதி உலா வருதலும் இடம் பெறும். (க-55)

# ஓமந்தையில் நால்வர் கைது

(வவுனியா)

ஓமந்தை சோதனைச் சாவடியில் வைத்து நால்வரை படையினர் கைது செய்துள்ளனர். போலி ஆவணங்களை சமர்பித்து விடுதலைப் புலிகளின் பகுதிக்குள் நுழைய முயன்றதாகவே அவர்கள் கைது செய்யப்பட்டனர் என்றும் கைது செய்யப்பட்ட அனைவரும் மேலதிக விசாரணைக்காக வவுனியா பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே திருகோணமலையில் 5 கிலோ கிராம் எடையுள்ள கிளைமோர் கண்ணிவெடியை இராணுவத்தினர் கைப்பற்றியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருமலை பாரதிபுரம் பகுதியில் நடத்தப்பட்ட பாரிய தேடுதல் நடவடிக்கையின் போது பொலித்தீன் உறை ஒன்றில் இந்த கிளைமோர் இருந்ததாக இராணுவத்தினர் தெரிவித்தனர். (க)

# புனர்வாழ்வு கழகத்துக்கான நிதியுதவியை நிறுத்த வேண்டும்!

## ஐ.நா.அமைப்புக்களுக்கு ஜே.வி.பி அழுத்தம்

(கொழும்பு)

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துக்கான நிதி உதவியை ஐ.நா. அமைப்புக்கள் நிறுத்த வேண்டும் என்று ஜே.வி.பி வலியுறுத்தியுள்ளது.

ஜே.வி.பி.நாடாளுமன்ற குழுத் தலைவர் விமல் வீரவன்ஸ இது குறித்து கருத்து தெரிவிக்கையில்,

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்துக்கான நிதி உதவியை நிறுத்த நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்று அரசாங்கத்தை வலியுறுத்தவுள்ளோம்.

அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் புனர்வாழ்வுக் கழகத்தின் நிதியானது விடுதலைப்புலிகளுக்கு வழங்கப்படுவது குறித்து விசாரணை நடத்தப்பட்டுள்ளது.

மேலும் ஆயுதங்களையும் விடுதலைப்புலிகளுக்கு புனர்வாழ்வுக்கழகம் இறக்குமதி செய்துள்ளது. கண்ணிவெடி அகற்றலுக்கான பணிகளுக்காக பல்வேறு நாடுகளிலிருந்தும் சர்வதேச அமைப்புக்களிடமிருந்தும் புனர்வாழ்வுக்கழகம் நிதி உதவி பெற்று வருகிறது.

ஆனால் தொடர்ந்து அரசாங்கப் பகுதிகளில் கிளைமோர்த் தாக்குதல் நடத்தப்பட்டுவருகிறது.

இதேசமயம் ஆழிப்பேரலைக்கான நிதியில் பெருமளவை புனர்வாழ்வுக்கழகம் பெற்றிருப்பதாக மத்திய வங்கியின் அறிக்கை தெரிவித்துள்ளது என்றும் சுட்டிக்காட்டினார். (க)

# இந்திய அரசின் அக்கறையை நசுக்க ஜே.வி.பி திட்டம்!

(கொழும்பு)

இனப்பிரச்சினையில் வெளிநாட்டுச் சக்திகளின் ஊடுருவலைத் தடுக்கும் முன்னெடுப்பு என்ற பெயரில் ஜே. வி. பி நடத்தி வரும் தொடர்ச்சியான கட்சி அங்கத்தவர் கூட்டத்தில் இந்தியா உட்பட வெளிநாட்டு சக்திகளை விரட்டியடிக்கும் நோக்கம் முன்வைக்கப்பட்டுள்ளது.

இதைத்தவிர ஜே.வி.பி கட்சியின் முக்கிய அங்கத்தவர்கள் ஆயிரம் பேர் கூடி கட்சித் தலைவர் சோமவன்ச அமரசிங்க தலைமையில் நடத்தவுள்ள கட்சி உயர் மட்ட கூட்டத்தொடரில் இந்தியா உட்பட அனைத்து வெளி நாட்டு சக்திகளையும் விரட்டியடிப்பதற்கான யோசனைகள் குறித்து ஆராயப்படவுள்ளது.

கொழும்பு மாநாகர சபை வளாகத்தில் நாளை புதன் கிழமை ஆரம்பிக்கப்படவுள்ள ஜே.வி.பி.கட்சி உயர்மட்ட மாநாட் டில் இந்திய வல்லாதிக்க சக்தியை முறியடிப்பது குறித்து மிக உன்னிப்பாக ஆராயப்படவுள்ளதாக அக் கட்சி வட்டாரங்கள் கருத்து வெளியிட்டுள்ளன. (க)

# கணினிக் கல்விப் பகுதி

## முகவரியை தக்க வைத்தல் 08

இணையத்திலிருந்து இலவச முகவரியை பெறுதல் கடினமான காரியம் இல்லை. பெற்ற முகவரியை விட்டுவிடாமல் தக்கவைத்துக் கொள்ளல் மிகவும் முக்கியமானதாகும். மின்னஞ்சல் முகவரியை பின்வரும் வழிகளில் தக்க வைத்துக் கொள்ளலாம்.

1. முகவரி பெயரையும் **(Mail ID)** நுழைவுச் சொல்லையும் **(Password)** மறக்காமல் நினைவு வைத்திருக்க வேண்டும்.

2. அடிக்கடி உங்கள் அஞ்சல் பெட்டிகளை அதாவது உங்கள் மின்னஞ்சலை திறந்து பார்க்க வேண்டும்.

சிலர் ஆசைக்காக ஒன்றுக்கு மேற்பட்ட மின்னஞ்சல் முகவரியை உருவாக்குவார்கள். ஆனால் ஆறு மாதம் கழித்து பார்த்தால் என்ன பெயரில் மெயில ஐடி உருவாக்கினார்கள் என்பதை மறந்துவிடுவார்கள். நினைவிருந்தாலும் யூசர் நேம் மற்றும் பாஸ்வேர்ட் கொடுத்து உள்ளே நுழைந்தாலும் 'நீண்ட நாள் பயன்படுத்தாத காரணத்தினால் உங்கள் மெயில் ஐடி முடக்கப் பட்டுவிட்டது' என்ற செய்தி வரலாம்.

யாகூ மெயிலில் ஐடி பெற்ற ஒருவர் 4 மாதத்திற்கு ஒரு முறையாவது மெயிலை பயன்படுத்தினால் உங்கள் மின்னஞ்சல் முகவரி உயிரோடு இருக்கும். இலவச மின்னஞ்சல் சேவையாளரிடம் கணக்கு வைத்திருப்பவர்கள் தொடர்ந்து மூன்று மாத காலம் தங்களின் அஞ்சல் பெட்டியை திறந்து பார்க்காவிட்டால கணக்கு செயலிழந்துவிடும் என்பது குறிப்பிடத்தக்கது.

ஒவ்வொரு முறையும் நாம் பயனாளர் பெயர் மற்றும் பாஸ்வேட்டை ரைப் செய்து உள்ளே சென்று வேலைகளை முடித்தபின் மறக்காமல் Sign Out செய்து வெளியே வரவும்.

தொகுப்பு : கே.ரி.சாரங்கன்
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி
Email: kt.sarangan@gmail.com

இமெயில் பயன்படுத்தும் போது முழுக்க முழுக்க ஆங்கிலம் என்று பயப்படவேண்டாம். இலகு ஆங்கிலத்திலும் எமக்கு விளங்கக்கூடிய வகையிலும் வடிவமைக்கப்பட்டுள்ளது. ஆங்கில அறிவு இல்லாதவர்கள் கூட இன்று மின்னஞ்சல் மற்றும் இணையத்தை பயன்படுத்தி வருகின்றனர்.

## இமெயிலினால் கிடைக்கும் பயன்கள்:

1. குறைந்த செலவில் வெளிநாடுகளிற்கோ அல்லது வெளியூருக்கோ ஒரு நெடிய பொழுதில் இமெயிலின்னை அனுப்பக்கூடியதாகவுள்ளது.

2. தேவையான தகவல்களை வெளிநாடுகளிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

3. வேலைக்கு விண்ணப்பிக்கலாம். இன்ரநெற்றில் பரீட்சை முடிவுகளை நேரடியாக தெரிந்து கொள்ளலாம்.

4. பிறந்த நாள் மற்றும் திருமணவிழாக்களுக்கான அழைப்புக்களை நண்பர்களுக்கு, உறவினர்களுக்கு, இமெயில் மூலம் அனுப்பி வைக்கலாம்.

5. வெளிநாட்டிற்கு செல்ல டிக்கட்டுக்களை உடனுக்குடன் இன்ரநெற்றில் பதிவு செய்யலாம்.

6. தொலைவு, மூலை, முடுக்கு, சேய்மை என்கிற வேறுபாடெல்லாம் கிடையாது. எங்கு இமெயில் அனுப்பினாலும் ஒரு நொடிப் பொழுதில் உரிமையாளரிடம் சென்றடைந்துவிடும். மின்னஞ்சலுக்கு விடுமுறை கிடையாது. இரவு, பகல் என்ற வேறுபாடு கிடையாது. எப்பொழுது வேண்டுமானாலும் இமெயில் அனுப்பலாம்.

7. இமெயல் கிடைக்கும் போது இணையத்தில் இணைந்திருக்க வேண்டியதில்லை. எமக்கு வசதியான நேரத்தில் வந்த மெயில்களை திறந்து படித்துக்கொள்ளலாம்.

8. எந்த நாட்டிலிருந்தோ அல்லது எந்த இடததிலிருந்தோ எமது மெயில்களைக் கையாளலாம்.

9. ஒரே கடிதத்தின் நகலை பலருக்கு எவ்வித கூடுதல் செலவுமின்றி அனுப்பி வைக்க முடியும்.

10. இமெயில் மூலம் படங்கள், பாடல்கள், வீடியோ தகவல்கள் எனப் பல்வேறு வகையான பைல்களை அனுப்பிக்கொள்ளலாம். ஏன் எமது குரலைக்கூட பதிவு செய்து விட்டு அதை மிக எளிதாக அனுப்பும் வசதியுள்ளது.

11. மின்னஞ்சலைக் கையாள சொந்தமாக கணினியோ அல்லது இணைப்பை வைத்திருக்கத் தேவையில்லை. பதிலாக இணைய மையங்களை (Netcafe) நாடலாம்.

## கணினிச் செய்திகள்

Windows XP நிறுவத் தேவையான கணினி உபகரணங்களும் அவற்றின் அளவுகளும்:

1.) Processor 555 Mhz ஐ விடக் கூடுதலான அளவாக இருத்தல் வேண்டும்.

2.) 128 MB கொண்ட நினைவகம் 256 MB or 512 MB ஆக இருந்தால் கம்பியூட்டர் அதி வேகமாக இருக்கும்.

3.) Windows XP நிறுவ ஹார்ட் டிஸ்கில் 650 MB இடம் தேவை.

4.) 256, 15' or 17' Colour Monitor, 800 x 600 Pixels


5.) CD or DVD ROM இருத்தல் வேண்டும்.

## வாரம் ஒரு இணையத்தளம்

www.doenets.lk இவ் இணையத்தளமானது இலங்கை பரீட்சை திணைக்களத்தினதாகும். க.பொ.த (சாதாரண மற்றும் உயர்தர), 5ம் தர பரீட்சை முடிவுகளை பார்வையிடும் தளமாகும்.

உரிய கட்டத்திற்குள் சுட்டெண்ணைக் கொடுத்து **Submit** என்பதை கிளிக் செய்வதன் மூலம் பரீட்சை முடிவுகளை உடனடியாகவே திரையில பெறக் கூடியதாகும். ரின்ட் நிறுவியிருப்பின் நேரடியாக காகிததத்தில் (Print) அச்சிட்டுக் கொள்ளலாம்.

## உலகிலேயே உயரமான கட்டடம்



பத்து மாடிக் கட்டடங்களையே பார்க்க வியப்பாக தோன்றும் நமக்கு, விண்ணைத் தொடும் கட்டடங்களைப் பார்த்தால் எப்படியிருக்கும்? கனடாவில் உள்ள ஒரு கட்டடம் உலகிலேயே மிக உயரமான கட்டடம் என்ற பெருமையைப் பெற்றிருக்கிறது. அந்த சாதனைக்குரிய கட்டடத்தின் பெயர், சி.என் கோபுரம்.

553.34 மீற்றர் உயரம் கொண்ட இந்த கோபுரத்தை ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த கட்டடக் கலை வல்லுனர் ஜான் ஆண்ட்ரூஸ் வடிவமைத்துக் கொடுத்தார். 1973ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 12ஆம் தேதி தொடங்கப்பட்ட இதன் கட்டட வேலைப்பாடுகள், 1975ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 12ஆம் தேதி நிறைவுபெற்றது. இங்கு 416 ரெஸ்டாரெண்டுகள் அமைக்கப்பட்டு உள்ளன. இந்தக் கட்டடத்தின் 351 மீற்றர் தூரத்தில் உள்ள ஸ்கைபாட் என்ற இடத்திற்கு ஆண்டுதோறும் 20 இலட்சம் சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கிறார்கள்.

## பெரிய அருங்காட்சியகம்

உலகிலேயே மிகப்பெரிய அருங்காட்சியகம் என்ற பெருமையுடன் கின்னஸ் புத்தகத்தில் இடம்பெற்றிருக்கிறது, அமெரிக்காவில் உள்ள சுமித் சோனியன் அருங்காட்சியகம். இங்கு பதினைந்து பல்வேறுபட்ட அருங்காட்சியகங்களும், ஒரு தேசிய மிருகக் காட்சிசாலையும் உள்ளது. பதினாறு கோடி பொருட்களும் உயிரினங்களும் இங்கே காணப்படுகின்றன. இந்த சாதனைக்குரிய அருங்காட்சியகத்தில் 6 ஆயிரம் பணியாளர்கள் வேலை பார்த்து வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## சின்னச் சின்ன ஆசை...!



இந்த உலகத்தில் பிறந்த ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு ஆசை இருக்கும். படத்தில் நீங்கள் பார்க்கும் நபர்கள் உலகத்தையே சுற்றி வர ஆசைப்படுபவர்கள். இவர்கள் இருவரும் தந்தையும், மகனும் ஆவர். இந்த உலகத்தை 68 நாட்களுக்குள் சுற்றிவரவேண்டும் என்ற எண்ணத்தில் ஒற்றை என்ஜின் பொருத்தப்பட்ட ஒரு இலகுரக விமானத்தில் பயணம் மேற்கொள்கின்றனர். தங்கள் பயணத்தின் ஒரு பகுதியாக இவர்கள் சமீபத்தில் தாய்லாந்து நாட்டின் தலைநகர் பாங்காக் வந்தனர். அங்கு இருந்து விமானத்தில் புறப்பட்டபோது எடுத்த படம்.

# வன்முறைகளுக்கு காரணம் படையினரின் செயற்பாடுகளே?

அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையில் 2002 ஆம் ஆண்டில் கைச்சாத்திடப்பட்ட யுத்த நிறுத்தத்தை மேற்பார்வை செய்யும் இலங்கை கண்காணிப்புக்குழு கடந்த வாரம் வெளியிட்டுள்ள அறிக்கை வடக்கிலும் கிழக்கிலும் அதிகரித்து வரும் வன்முறைகள் மற்றும் படுகொலைகளில் இலங்கை இராணுவம் சம்பந்தப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டுகிறது.

பெப்ரவரியில் அரசாங்கத்திற்கும் புலிகளுக்குமிடையில் ஜெனீவாவில் நடந்த பேச்சுவார்த்தைகளின் பின்னர் கண்காணிப்புக் குழு இந்த அறிக்கையை வெளியிடத் தீர்மானித்திருந்தது. இந்தப் பேச்சுவார்த்தைகளில் இரு தரப்பினரும் யுத்த நிறுத்த உடன்படிக்கைக்கான தமது ஆதரவை மீள் உறுதி செய்தனர். இந்த அறிக்கை ஏப்ரலில் ஜெனீவாவில் நடக்கவிருந்த இன்னுமொரு சுற்று பேச்சுவார்த்தையின் போது முன்வைக்கப்படவிருந்தது. ஆனால் இரு பக்கத்திலும் அதிகரித்து வந்த வன்முறைகளின் மத்தியில் இந்தப் பேச்சுவார்த்தை இரத்து செய்யப்பட்டது.

இதன் விளைவாக இவ்வாண்டு ஜூன் 8,9 திகதிகளில் ஒஸ்லோவில் நடக்கவிருந்த மட்டுப்படுத்தப்பட்ட பேச்சுக்களுக்காக இந்த அறிக்கை தயார் செய்யப்பட்டிருந்தது. அது கண்காணிப்புக்குழுவின் தலைவர் மேஜனர் ஜெனரல் உல்ஃவ் ஹென்றிக்சனால் கைச்சாத்திடப்பட்டு ஜூன் 4ஆம்ள திகதியிடப்பட்டிருந்த போதிலும் பேச்சுவார்த்தைகளுக்கு முன்னதாக வெளியிடப்படவில்லை.

சண்டே டைம்ஸ் பத்திரிகையின் படி அதன் உள்ளடக்கத்தைப்பற்றி அரசாங்கம் சீற்றங்கொண்டதோடு இந்த அறிக்கை பேச்சுவார்த்தைகளுக்கு முன்னதாகவே ா அல்லது பேச்சுக்களின் போதோ முன்வைக்கப்பட்டால் தமது பிரதிநிதிகளை விலக்கிக் கொள்வதாகவும் அச்சுறுத்தியது. எவ்வாறெனினும் பிரதிநிதிகள் ஒஸ்லோவில் சந்திக்கவேயில்லை. இலங்கை அரசாங்கத்திற்கும் புலிகளுக்குமிடையிலான ஒஸ்லோ பேச்சுவார்த்தை குழம்பியது.

### க.கா ளளகுழுவின் அறிக்கை எச்சரிக்கைவிடுக்கும் ராஜதந்திரஆவணமாகும்

இருதரப்பினரும் யுத்த நிறுத்தத்தை மீறியுள்ளதை மேற்கோள் காட்டும் கண்காணிப்புக் குழுவின் அறிக்கை, ஒரு எச்சரிக்கை விடுக்கும் ராஜதந்திர ஆவணமாகும் எவ்வாறெனினும் கொழும்பு அரசாங்கம் கவலையடைந்திருப்பது போல இரு தரப்பினரையும் சமமாக அணுகும் முறை ஒரு சாபக்கேடாகும். அதன் பிரச்சாரத்தை பொறுத்தளவில், புலி உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்கள் மீதான தாக்குதல்களில் இராணுவத்திற்குத் தொடர்பில்லாத அதே வேளை, தற்போதைய வன்முறைகளுக்கான அனைத்துக் குற்றச்சாட்டுக்களும் புலிகள் மீதே தங்கியிருக்கின்றது. இதன் அடிப்படையில் கண்காணிப்புக் குழு புலிகளுக்கு பக்கச் சார்பாக நடந்து கொள்வதாக கண்டனம் செய்து அரசாங்கம் ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளது.

கண்காணிப்புக் குழுவின் உத்தியோக பூர்வ ஆவணம் இந்தக் குற்றச் சாட்டுக்களை துளைத் துள்ள தையிட்டு அரசாங்கம் சீற்றமடைந்துள்ளது. 2002 யுத்த நிறுத்த உடன்படிக்கையின் ஒரு பாகமாக கொழும்பு அரசாங்கமானது இலங்கை அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் அரசாங்க பாதுகாப்புப் படைகளைத்தவிர ஏனைய ஆயுதக்குழுக்களோ அல்லது தனி நபரோ ஆயுதம் ஏந்தாமல் இருக்க அல்லது ஆயுதம் ஏந்தி நடவடிக்கையில் ஈடுபடாமல் இருக்க நடவடிக்கை எடுப்பதாக உடன்பட்டது. அரசாங்கம் ஜெனீவா பேச்சுக்களின் போதும் இந்த விதியை உறுதிப் படுத்திய தோடு புலிகளுக்கு எதிரான துணைப் படைக் குழுக்களின் தாக்குதல்கள தாக்குதல்களில் இராணுவம் சம்பந்தப்பட்டுள்ளது என்ற குற்றச்சாட்டுக்களையும் மறுத்தது.

### விக்னேஸ்வரன்படுகொலை

இந்த அறிக்கை இராணுவத்திற்கும் தமிழ் ஆயுதக்குழுக்களின் கொலைகார நடவடிக்கைகளுக்கும் இடையிலான தொடர்பை ஸ்தாபிக்கும் ஆதாரங்கள் கொண்ட குறிப்பிடத்தக்க பகுதியை வழங்குகிறது. எல்லாவற்றுக்கும் மேலாக படைகளால் மேற்கொள்ளப்பட்ட குறிப்பான ஆத்திரமூட்டல் படுகொலைகளை அடுத்தே வன்முறைகள் மிகக் கூர்மையாக மோசமடைந்தன என்ற உண்மையை கண்காணிப்புக்குழுவின் அறிக்கை வெளிச்சம் போட்டுக்காட்டியுள்ளது. ஏப்ரல் 7 திருகோணமலையில் திருமலைமாவட்ட தமிழ் மக்கள் பேரவை தலைவரான வி.விக்னேஸ்வரன் சுட்டுக்கொல்லப்பட்டார்.

அந்த அறிக்கை குறிப்பிட்டதாவது: (பெப்ரவரியில்) உயர்மட்ட பேச்சுக்களை மீண்டும் தொடங்குவதற்கான முடிவுகள் எடுக்கப்பட்டதை அடுத்து வன்முறைகளின் மட்டம் தீவிரமாக குறைந்திருந்தாலும் 2006 ஏப்ரல் 7 அன்று திருகோணமலை மாவட்டதமிழ் மக்கள் பேரவையின் தலைவரைப்படுகொலை செய்ததை அடுத்து நிலைமை மீண்டும் மிகவும் பதற்றமடைந்தது. இந்தப் படுகொலை அரசாங்க படைகளுக்கு எதிரான தாக்குதல்களை மீண்டும் வெடிக்கச் செய்ததோடு விசேடமாக கிழக்கில் கைக்குண்டு மற்றும் கண்ணிவெடித் தாக்குதல்களிலேயே இது தொடங்கியது.

இந்தப் படுகொலையில் பர்துகாப்புப் படைகள் சம்பந்தப்பட்டிருப்பதை கண்காணிப்புக்குழு சாடை காட்டியுள்ளது. பிரதான பொலிஸ் மற்றும் பாதுகாப்பு நிலைகளுக்கு நெருக்கமான இடத்தில் இந்த தமிழ் அமைப்பின் முன்னணி உறுப்பினர் கொடூரமாக கொலை செய்யப்பட்டிருப்பதானது சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாக்கும் இலங்கை அரசாங்கத்தின் இயலுமையைப் பற்றி பாரிய சந்தேகங்களை எழுப்பியுள்ளது. என அது சுட்டிக்காட்டியுள்ளது. இந்தக் கொலையுடன் தொடர்புடைய எந்தவொரு நபரையும் அல்லது கடந்த நவம்பரில் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதி தேர்தலில் வென்றது முதல் புலிகளுக்கான ஆதரவாளர்கள் மீதான ஏனைய எந்த வொரு தாக்குதலுடனும் தொடர்புடைய எந்த நபரையும் இலங்கை பொலிஸ் கைது செய்திருக்கவில்லை என்பதையும் அந்தஅறிக்கையில் சுட்டிக்காட்டியிருக்க முடியும்.

விக்னேஸ்வரனின் கொலை ஒரு தனிப்பட்ட விடயமல்ல. ஏப்ரல் 10 ஆம் திகதிக்குப் பின்னர் மட்டும் ஏறத்தாழ குறிவைக்கப்பட்ட படுகொலை நடவடிக்கைகளில் மட்டும் 43 பொதுமக்கள் யாழ்ப்பாணத்தில் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். பல சந்தர்ப்பங்களிலும் இந்தப் படு கொலைகள் பாதுகாப்புப் படையினர் நிரந்தரமாக இருக்கும் இடங்களுக்கு மிக நெருக்கமாகவே இடம்பெற்றுள்ளன. ஆனால் இன்னமும் இத்தகைய கொலைகளுக்கு சாட்சிகள் வழங்க மறுத்து வருகின்றனர் என கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது.

அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இருந்து தாக்குதல்களைத் தொடுக்கும் துணைப்படைகளின் குறிப்பிட்ட விவகாரத்தை இந்த அறிக்கை மேற்கோள் காட்டியது. கண்காணிப்புக் குழுவால் மூன்று தாக்குதல்களை உறுதிப்படுத்திக் கொள்ள முடிந்தது. இந்தத் தாக் குதல்களின் போது தாக்குதல்காரர்கள் இலங்கை அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பிரதே சத்தில் இருந்து வந்தார்கள் அல்லது திரும்பி ஓடினார்கள். மார்ச் 2 வவுனதீவில் புலிகளின் காவலரண் மீது நடத்தப்பட்ட தாக்குதல், மார்ச் 23 மஹிந்தபுர பூநகரில் புலிகளின் காவலரண் மீதான தாக்குதல் மற்றும் ஏப்ரல் 6 பனிச்சங்கேணியில் புலி களின் காவலரண் மீதான தாக்குதலும் இதில் அடங்கும்.

### அரசுடன் இயங்கும் கருணா குழுவினர்

கருணா குழு அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் இருந்து இயங்கவில்லை என்ற அரசாங்கத்தின் கூற்றுடன் கண்காணிப்புக்குழு நேரடியாக முரண்படுகின்றது. தெளிவாக அடையாளங் காணப்பட்டுள்ள ஒரே ஆயுதக் குழு கருணா குழுவும் அவர்களின் அரசியல் முன்னணியான தமிழீழ மக்கள் விடு தலைப் புலிகளுமேயாகும். இந்தக் குழு இலங்கை அரசாங்கத்தின் கூற்றுக்கு முரணாக மார்ச் மாதத்தில் கிழக்கில் அரசாங்கக் கட்டுப்பாட்டு பிரதேசங்களில் இயங்குவது தெளிவாக அம்பலத்திற்கு வந்துள்ளது. கண் காணிப்புக் குழு கருணா ஆதர வாளர் களுடனும் தமிழீழ மக்கள் விடுதலைப் புலிகள் உறுப்பினர்களுடனும் நேரடியாக தொடர்பு கொண்டதோடு அவர்களது இருப்பும் மற்றும் நடவடிக்கைகளும் அரசாங்க அலுவலர்களால் அடிக்கடி உறுதிப் படுத்தப்பட்டுள்ளன என அது தெரிவித்துள்ளது. கண்காணிப்புக் குழு தெரிவித்திருப்பதாவது: இலங்கை அரசாங்கம் கருணா குழுவுக் கு செயற்திறனுடன் ஆதரவளித்துக்

கொண்டிருப்பதற்கான அறிகுறிகள் பல உள்ளன. கருணா ஆதரவாளர்கள் என அறியப்பட்டுள்ளவர்கள் இலங்கை இராணுவத்தின் முகாம்களுக்கும் மற்றும் முகாம்களில் இருந்தும் நடமாடிக் கொண்டிருப்பதோடு இது பாதுகாப்புப் படையினரும் பொலிஸும் சில பிரதேசங்களில் ஆயுதக் குழுக்கள் இயங்குவதை தவிர்க்க நடவடிக்கைகள் எதையும் எடுக்கவில்லை என்பதற்கும் ஆதாரமாகும் பொதுமக்கள் மீதான ஆயுத பாணிகளின் வன்முறைகள் சம்பந்தமான கண்காணிப்புக்குழுவின் விசாரணைகள் வவுனியா மாவட்டத்தில் ஆயுதக் குழுக்களுக்கு இராணுவப் புலனாய்வுத் துறையும் இராணுவமும் ஆதரவளிப்பது பலம் வாய்ந்த முறையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கண்காணிப்புக் குழு ஒரு விசேட சம்பவத்தை மேற்கோள் காட்டியுள்ளது. ஏப்ரல் 30 அன்று கிழக்கில் மட்டக்களப்பு மாவட்டத்தில் கருணா குழுவின் முகாமை புலிகள் தாக்கியதை அடுத்து காய்மடைந்த 10 கருணா குழு உறுப்பினர்கள் அரசாங்க ஆஸ்பத்திரிக்கு கொண்டுவரப்பட்ட போது அவர்களை கண்காணிப்புக்குழு பார்வையிடுவதை இராணுவம் மறுத்தது. இராணுவத்தின் நடவடிக்கைகள் யுத்த நிறுத்த உடன்படிக்கையை மீறுவதோடு கருணா குழுவுடனான அதனது உறவைப்பற்றி கண்காணிப்புக்குழு அறிந்து கொள்வதை தவிர்ப்பதில் இராணுவம் அக்கறையாக இருந்தது என குறிப்பிடப்படுகிறது.

### க.கா.குழுவினர் எதிர் நோக்கும் பிரச்சினைகள்

படுகொலைகளில் இராணுவ சிப்பாய்கள் சம்பந்தப்பட்டுள்ளனர் என கண்காணிப்பாளர்கள் குற்றஞ்சாட்டியதை அடுத்து கண்காணிப்புக்குழுவின் அணுகுமுறைகள் மேலும் கட்டுப்படுத்தப்பட்டதாக அந்த அறிக்கை சுட்டிக்காட்டியு ள்ளது. அரசாங்கக் கட்டுப்பாட்டுப்பிரதேசங்களில் ரோந்து செல்லும் போதும் கண் காணிப்புக்குழு பிரச்சினைகளுக்கு முகங் கொடுக்கின்றது. சட் ட நடவடிக்கை களுக்கு அப்பாற்பட்ட படுகொலைகளில் இலங்கை அரசா ங்கத்தின் தலையீட்டைப் பற்றி ஏப்ரலில் 29 கண்காணிப்புக்குழு ஒரு பத்திரிகை அறிக்கையை வெளியிட்டதில் இருந்து பல சந்தர்ப்பங்களில் சோதனைச் சாவடிகள் மற்றும் உள்செல்லும், வெளி செல்லும் சோதனை நிலையங்களில் செல்வதற்கும் கண்காணிப்பு குழுவிற்கு அனுமதி மறுக்கப்பட்டது. கண்காணிப்பு குழு சுட்டிக்காட்டியுள்ளவாறு இந்த முடிவுகள்உயர்மட்டத்தில் இருந்து வந்துள்ளன. தாம் கொழும்பில் இருந்து வரும் கட்டளைகளுக்கு இணங்கவே செயற்படுவதாக பாதுகாப்பு படைகள் கூறுகின்றன என அறிக்கை குறிப்பிடுகின்றது.

தமது புலன் விசாரணைகளுடன் இராணுவம் ஒத்துழைக்கத் தவறிவிட்டது என கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது. இலங்கை அரசாங்கத்தைப் பொறுத்தளவில், பாதுகாப்புப் படைகள் மற்றும் பொலிஸ் ஆகிய இரண்டும் குறிப்பாக வவுனியாவில் ஆயுதக்குழுக்களின் செற்பாடுகள் சம்பந்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் பற்றி காண்காணிப்புக்குழு விசாரணைகளுக்கு வந்த போது கட்டுப்பாடுகளை விதித்தன. 2005 டிசம்பர் 23அன்று மன்னார் பேசாலையில் கடற்படையினரின் பஸ்மீதான தாக்குதலை அடுத்து நான்கு பொதுமக்கள் காணாமல் போனது சம்பந்தமாக விசாரிப்பது கண்காணிப்புக்குழுவுக்கு மிகச் சிரமமாக இருந்தது. இந்த காணாமல் போன சம்பவத்திற்குப் பின்னால் இருப்பதாக குற்றஞ்சாட்டப்பட்ட இலங்கை கடற்படை இந்த சம்பவத்தில் தெளிவு பெறுவதற்காக கடற்படை கண்காணிப்புக்குழுவுடன் ஒத்துழைக்க முற்றிலும் விருப்பமின்றி இருந்தது.

உண்மையில் கண்காணிப்புக்குழுவின் அறிக்கை இராணுவ சிப்பாய்கள் மீதான புலிகளின் தாக்குதலையும் சுட்டிக்காட்டுகிறது. இதன் விளைவாக 88 பேர் உயிரிழந்துள்ளனர். புலிகளின் மறுப்புக்களை நிராகரிக்கும் அது தாக்குதல்களில் தொகை இலக்குகள் பயன்படுத்தப்பட்டுள்ள செயற்திட்டம் மற்றும் நில இயல்சார்ந்த அளவுகளும் புலிகளையே சூத்திரதாரிகளாக சுட்டிக் காட்டுகின்றன. என பிரகடனம் செய்துள்ளது ஜெனீவாவில் ஒப்புகொண்டதையும் மீறி தமது படைகளை பெரிதாக்குவதற்காக சிறுவர்களை படையில் சேர்த்தல் மற்றும் சிறுவர் கடத்தலையும் உக்கிரப்படுத்தியிருப்பதாகவும் கண்காணிப்புக்குழு புலிகள் மீது குற்றஞ்சாட்டுகிறது.

இந்த அறிக்கை ஏப்ரல் 25 மத்திய கொழும்பில் இராணுவத்தலைமையகத்தின் மீதான புலிகளின் தற்கொலைக் குண்டுத்தாக்குதலை கண்டனம் செய்ததோடு மே11அன்று யுத்தக் கண்காணிப்பாளர் ஒருவரின் உயிரையும் ஆபத்திற்குள்ளாக்கிய பிரதான கடல் மோதலைத் தூண்டியதற்காகவும் புலிகள் மீது குற்றஞ்சாட்டியுள்ளது. எவ்வாறெனினும் அதே சமயம் இந்தத் தாக்குதல்களுக்கு இராணுவத்தின் இயல்புக்குப் பொருந்தாத மற்றும் உக்கிரமான பிரதிபலிப்பையும் அது சுட்டிக்காட்டியுள்ளது. பழிவாங்கும் நடவடிக்கையாக இலங்கை ஆயுதப் படைகள் எப்ரலில் 25 மற்றும் 26ஆம் திகதிகளில் புலிகளின் அரசியல் மற்றும் இராணுவ இலக்குகளைத் தாக்குவதற்காக விமானங்களையும் ஆட்டிலரிகளையும் பயன்படுத்தி புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதியான சம்பூர் மற்றும் இலக்கத்தை கிராமங்கள் மீது தாக்குதல் தொடுத்தது. இந்த நடவடிக்கைகளில் சுமார் 15 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். என அது குறிப்பிட்டுள்ளது.

### க.கா குழுவின் அறிக்கை எதை வெளிப்படுத்துகின்றதுஎன்றால்....

இராணுவம் மற்றும் அதன் துணைப் படை பங்களிகள் மீதான வன்முறைத் தாக்குதல்களில் புலிகள் சம்பந்தப்பட்டிருப்பதில் எந்த சந்தேகமும் கிடையாது ஆனால் கண்காணிப்புக்குழுவின் அறிக் கை தெளிவுபடுத்துவது என்னவென்றால் அதிகரித்துவரும் வன்முறைகளுக்கான பொறுப்பு புலிகளை பதில் தாக்குதல் தொடுக்கத் தூண்டுவதற்காக தமிழ் துணைப்படைக்குழுக்களுடன் கூட்டு வைத்திருக்கும் இலங்கை அரசாங்கத்தையும் மற்றும் இராணுவத்தையுமே சாரும் என்பதாகும்.

தனது மொழி மற்றும் அணுகுமுறையில் எச்சரிக்கையாக இருந்த போதிலும் இந்த அறிக்கையானது புலிகளின் ஆத்திரமூட்டல்களுக்கு மத்தியிலும் கட்டுப்பாட்டின் எடுத்துக்காட்டாக உள்ளூர் மற்றும் சர்வதேச ஊடகங்களில் மஹிந்த ராஜபக்ஷ வளர்த்துவிட்டிருந்த கட்டுக்கதைகளை துளைத்துள்ளது. தனது அரசாங்கம் எதிர்கொண்டுள்ள அரசியல் மற்றும் சமூக நெருக்கடிகளைத் தீர்க்க இலாயக்கற் ற நிலையில் ஜனாதிபதி தனக்கு முன்னர் இருந்த கொழும்பு அரசியல்வாதிகளைப் போலவே உழைக்கும் மக்களைப் பிளவுபடுத்துவதற்காக வேண்டுமென்றே இனவாத பதற்றங்களை கிளறிவிடுவதோடு அவ்வாறு செய்வதன் மூலம் நாட்டை மீண்டும் யுத்ததிற்குள் தள்ளிக்கொண்டிருக்கின்றார்.

நன்றி:- இணையத்தளம்

# கர்மவீரர் காமராஜர்

## மீள்பார்வை 17

முருக-தனுஷ்கோடி



*செய் அல்லது செத்து மடி*

அன்று காலை 9மணிக்குக் காங்கிரஸ் மாநாட்டுப் பந்தலில் காங்கிரஸ் கொடியை ஏற்றி வைக்கத் திட்டமிருந்தது தலைவர்கள் கைது செய்யப்பட்டதால் அது நடக்குமோ நடக்காதோ எனச் சிலர் ஐயமுற்றனர்.

*பாய்ந்து வந்த வீராங்கனை*

ஆனால் பிரளயமே ஏற்பட்டாலும் திட்டமிட்டபடி கொடி யேற்றும் நிகழ்ச்சி நடந்தே தீரும் எனச், சவால் விடுவது போலத் தூய கதராடை உடுத்திய ஓர் இளம் மங்கையர் திலகம் ஜான்சி ராணியெனக் கொடிமரத்தை நோக்கிப் பாய்ந்து திட்டமிட்டபடி காலை 9மணிக்கே காங்கிரஸ் கொடியை ஏற்றிப் பறக்கச் செய்தார். வெள்ளைப் பொலிஸார் துள்ளித் துடித்துவந்து அந்த வீராங்கனையைத் தடுக்க முயன்றனர். அதற்குள் அந்த வீராங்கனைபிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்கு எதிராக ஆகஸ்டு புரட்சியை நாடெங்கும் நடத்தும்படியாக வீரமுழக்கமே செய்துவிட்டார். அவர்தான் புரட்சி வீராங்கனை அருணா ஆஸப் அலி.

அன்று பம்பாயிலிருந்து புறப்பட்ட சென்னை ரெயிலில் தலைவர் காமராஜ் உட்பட தமிழகத்துப் பிரதி நிதிகள் திரும்பினர். ஆந்திரத் தலைவர் என் . சஞ்சீவரெட்டியும் அதே ரெயிலில் புறப்பட்டார். ஆனால் ஆந்திர எல்லையை அடைந்ததுமே அவர் கைது செய்யப்பட்டு விட்டார்.

அப்போதே உடனிருந்த தலைவர் காமராஜ் எச்சரிக்கையாகிவிட்டார். சென்னைக்குப் போன துமே தாங்கள் அனைவரும் கைது செய்யப்படுவோம் என்பதை உணர்ந்தார். காமராஜ் தாம் மட்டும் எப்படியும் வெளியே சில நாள் இருந்து ஆகஸ்டு போராட்ட முயற்சிகளை மாவட்ட வாரி யாக ஏற்பாடு செய்த பின்னரே கைதாகவேண்டும் என்று தீர்மானித்துக்கொண்டார். வழி வேண்டும் என்று தீர்மானித்துக்கொண்டார். வழி நெடுகிலும் பலத்த பொலிஸ் பாதுகாப்பு இருந்தது.

ஒவ்வொரு ரெயில்வே ஸ்டேஷனிலும் ஆயுதம் தாங்கிய பொலிஸார் நிறுத்தப்பட்டிருந்தனர். அவசியமான காங்கிரஸ் தலைவர்க்ளைக் கைது செய்யும் உத்தரவும் அவர்களுக்குப் பிறப்பிக்கப்பட்டிருந்தது.

பம்பாய் எக்ஸ்பிரஸ் சென்னைக்கு சுமார் 35 மைல் தொலைவில் உள்ள அரக்கோணம் சந்திப்பில் வந்து நின்றது. தலைவர் காமராஜ் தலையை நீட்டி மெள்ளப் பார்த்தார். பிளாட்பாரத்தில் ஏராளமான பொலிஸார் நிறுத்தப்பட்டிருந்தனர்.

இருப்பினும் தான் அங்கேதான் இறங்கியாக வேண்டும் இறங்காது சென்னைக்குப் போனால் மற்றவர்களோடு தாமும் கைது செய்யப்படக்கூடும் என எண்ணினார். ஒரு துணியை எடுத்துத் தலையில் கிராமத்து ஆள் மாதிரிக் கட்டிக்கொண்டார். மேலே துண்டு ஒன்றையும் போட்டுக் கொண்டார் கையில் ஒரு சிறிய மூட்டை அதற்குள்தான் பம்பாய் காங்கிரஸ் தீர்மானத்தின் நகல்கள்.

## 9.இரகசியப் பிரச்சாரம்

யாரும் தம்மை கவனிக்கா வண்ணம் சர்வ சாதாரணமாக ரெயிலை விட்டு இறங்கிப் பிளாட்பாரத்தில் நடந்தார். அவருக்கு எதிரிலேயே வந்த ஒரு பொலிஸ்காரன் கூட அவரைக் கவனிக்கவில்லை ரெயில் நிலையத்தை விட்டு ஆழ்ந்த சிந்தனையோடு வெளியே வந்தார்.

நடையில் வேகம் காட்டி பஸ் நிலையத்தை அடைந்தார் . ராணிப் பேட்டைக்குச் செல்லும் பஸ்ஸில் ஏறினார் அப்பாவி போல ஒரு மூலையில் அமர்ந்தார்.

அப்போதும் தலைப்பாகையை எடுக்கவில்லை சற்று நேரம் கழித்தே பஸ்புறப்பட்டது. பஸ் ஓடிக் கொண்டிருக்கும் அந்த வேளையில் புரட்சிவீரர் காமராஜின் உள்ளம் அந்த பஸ்ஸைவிட வேகமாய்ப் பறந்து ராணிப் பேட்டையைச் சென்றடைந்தது.

நல்ல மையிருட்டு நேரத்தில் பஸ்ஸில் இருந்து இறங்கிய தலைவர் காமராஜ் அவ்வூரில் உள்ள தமது நண்பரும் மாவட்டக் காங்கிரஸ் கமிட்டி உறுப்பினருமான கே.ஆர். கல்யாணராம ஐயரிடம் சென்றார்.

அவரது வீடு அடைக்கப்பட்டிருந்தது. இரவு இருளில் யாரோ வந்து கதவைத் தட்டியவுடனேயே கல்யாணராம ஐயர் சரிதான் நம்மைக் கதை செய்யத்தான் பொலிஸ்காரர்கள் வந்து விட்டார்களோ என்று சந்தேகப்பட்டவாறே வந்து கதவைத் திறந்தார். ஆனால் அவர் எதிரே காமராஜ் நிற்பதைப் பார்த்ததும் அவருக்கு வியப்பும் திகைப்பும் ஒரு சேர எழுந்தது. உடனே காமராஜை உள்ளே அழைத்துச்சென்றார்.

கல்யாணராம ஜயரின் வயதான அன்னையார் காமராஜுக்கு சிறிது பழங்களையும் உணவையும் கொடுத்து உண்ணச் செய்தார். காமராஜும் தமது மகனும் ஈடுபட்டுள்ள சுதந்திரப் போராட்டம் விரைவில் வெற்றிபெறவேண்டும் என்று வாழ்த்தினார் பிரார்த்தனை செய்தார்.

பின்னர் கல்யாணராம ஐயரும் காமராஜும் பம்பாய் காங்கிரசைப் பற்றியும் நாட்டின் நில வரத்தைப் பற்றியும் இனிமேல் தாங்கள் என்ன செய்யவேண்டும் என்ற எதிர்காலத்திட்டம் பற்றியும் நீண்ட நேரம் விவாதித்தனர். முடிவில் மறுநாள் மாலை அவ்விருவரும் தஞ்சை மாவட்டம் வழி யாக திருச்சி மதுரை திருநெல்வேலி முதலிய இடங்களுக்குச் சென்று ஆகஸ்டு போராட்டத்துவக்கத்திற்கான செயல் திட்டங்களை விளக்கவேண்டும் என்று தீர்மானித்தார்கள்.

*கதவைத் தட்டிய பொலிஸ் அதிகாரி*

அதுவரைக்கும் இடையேயுள்ள 24 மணிநேரத்தைக் காமராஜ் எங்கே கழிப்பது என்ற பிரச்சினை தலைதூக்கியது. கல்யாணராம ஐயரைக்கைது செய்ய எந்த நேரமும் பொலிஸார் வரக்கூடும் என்று எதிர்பார்த்துக்கொண்டிருந்தால் அவருடைய வீட்டில் காமராஜ் தங்குவது அவ்வளவு நல்லதல்ல என்ற கருதப்பட்டது. எனவே அடிக்கடி யாரும் அணுகாத இடத்தில் அவர் தலை மறைவாக இருக்க வேண்டிய தாயிற்று.

ஆகையால் ஜனாப் முகமது சுலைமான் என்ற தேசியவாதியின் ஒதுக்குப்புறமான தோட்டத்தின் ஒரு மூலையில் அமைந்துள்ள ஓர் எளிய ஆனால் அழகிய சிறு வீட்டில் காமராஜை இருக்கச் செய் வது என்று கல்யாணராம ஐயர் தீர்மானித்தார். சுலைமானும் உடனடியாக அதற்குச் சம்மதித்தார். தலைமறைவாக இருக்கின்ற அரசாங்கத்தால் தேடப்பட்டு வருகின்ற ஆகஸ்டு போராட்ட வீரர் ஒருவருக்கு அடைக்கலம் கொடுப்பதால் விளையக் கூடிய பாதகங்களுக்கெல்லாம் நீர் தயார் தானா என்று சுலைமான் சாயபுவிடம் கேட்கப்பட்டது.

அதற்கு அந்தத் தேசபக்த முஸ்லிம் பெரியவர் தேசத்துக்காக நீங்கள் எல்லாம் இவ்வளவு துன்பங்களை அனுபவிக்கும் போது இந்த பிஸாத்து இடத்தை கொடுப்பதற்குக்கூட பயந்தால் நான் ஆம்பிள்ளையா இல்லே பொம்பிள்ளையா? என்று போட்டார் ஒரு போடு.

(தொடரும்)

## படையினரால் விரட்டப்பட்ட செய்தியாளர்கள்

(மன்னார்)

பேசாலைப் படுகொல்லகள் தொடர்பாக நியமிக்கப்பட்ட படைத் துறை ஆணைக்குழுவின் விசாரணை நடவடிக்கைகளின் போது செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்கள் படையினரால் விரட்டப்பட்டுள்ளனர். பேசாலை வெற்றி நாயகி தேவாலயத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்ற விசாரணைகள் தொடர்பாக செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்களுக்கே இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

தேவாலயச் சூழலில் காவற் கடமையிலிருந்த படையினர் ஊடகவியலாளர்களிடம் நீங்கள் தமிழரா? சிங்களவரா? எனக் கேட்டு தமிழர்களான ஊடகவியலாளரை அவ் விடத்திலிருந்து விரட்டியுள்ளனர். இவ்வாறு விரட்டப்பட்டவர்களுள் அரச ஊடகங்களின்செய்தியாளர்களும் அடங்குவர்.

குறித்த அரச ஊடகச் செய்தியாளர்களும் தமது தலைமையகத்துக்கு இது குறித்த அறிவித்த போது பாதுகாப்பமைச்சுப் பேச்சாளரான கெகலிய ரம்புக்வெலவிடம் இது குறித்துப் பேசும்படி அவர்களுக்கு கூறப்பட்டுள்ளது.

மன்னாரில் நடைபெற்ற கோரமான படுகொலை குறித்து நடைபெறும் விசாரணைகள் குறித்த தகவல்கள் மக்களைச் சென்றடைய விடாது தடுக்கும் படையினரின் இந் நடவடிக்கைகள் குறித்து ஊடகவட்டாரங்களும் மக்களும் மிகுந்த விசனம் தெரிவிக்கின்றனர்.

(க)

## வியாபாரிகள் கவலை

(யாழ்ப்பாணம்)

அண்மைக்காலமாக தென்மராட்சி பகுதியில் வியாபார நடவடிக்கை கள் பெரும் வீழ்ச்சியடைந்துள்ளதாக அப்பகுதி வர்த்தகர்கள் கவலை தெரிவிக்கின்றனர். சாவகச்சேரியிலும் கொடிகாமத்திலும் பிரதான சந்தைகள் அமைந்துள்ள போதிலும் அங்கு பொருட்களை கொள்வனவு செய்யும் மக்களின் எண்ணிக்கை வெகுவாக குறைவடைந்துள்ளது. இதனால் வியாபாரிகள் பெரும் பாதிப்படைந்துள்ளனர்.

புறநகர் விற்பனை நிலையங்களிலும் மக்களின் நடமாட்டம் குறைவாக காணப்படுவதால் வியாபார நிலையங்களிலும் வியாபாரம் குறைவடைந்துள்ளன. இவைதவிர சாவகச்சேரி கைதடி மற்றும் கொடிகாமம் நகர் புற வியாபார நிலையங்களில் வீதியின் இரு பக்கங்களிலும் பொது மக்களின் வாகனங்கள் துவிச்சக்கரவண்டிகள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் ஆகியவற்றை நிறுத்துவதற்கு படையினர் தடை செய்துள்ளதால் பாவனையாளர்கள் மற்றும் வியாபார நிலைய உரிமையாளர்கள் பாதிப்படைந்து வருகின்றனர்.

(க)

## மன்னாரில் தமிழ் இளைஞன் சுட்டுக்கொலை!

(மன்னார்)

மன்னாரில் இராணுவத்தினரால் தமிழ் இளைஞர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

மன்னார் சிறு கண்டல் கிராமத்தில் அடையாளம் தெரியாத நபர்கள் கடந்த சனிக்கிழமை காலை இராணுவக் குழுவினர் மீது தாக்குதல் நடத்தினர் இதையடுத்து இராணுவத்தினர் நடத்திய கண்மூடித்தனமான துப் பாக்கிச் சூட்டில் யாழ். பருத்தித்துறையைச் சேர்ந்த மார்க்கண்டு பரதநாதன் என்பவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

பரதநாதனின் சடலம் அருகே அவரது அடையாள அட்டை இருந்தது. மன்னார் மேலதிக நீதிபதி டி.ஜே.பிரபாகரன் மன்னர் மருத்துவமனைக்கு சென்று பரதநாதனின் உடலை பார்வையிட்டார். இது தொடர்பிலான விசாரணை எதிர்வரும் 12ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (க)

## இந்தியா செல்ல முயன்ற இளைஞன் விளக்கமறியலில்

(மன்னார்)

தலைமன்னார் கடற்கரைப் பகுதியில் வைத்து இளைஞர் ஒருவர் கடந்த வெள்ளிக்கிழமை காலை தலைமன்னார் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தியாசெல்லும் நோக்கில் அப் பகுதியில் நடமாடிய அள வங்கலையயை சேர்ந்த பிலிப்பு நேரிஸ் றோய் எனும் 30 வயதுடைய நபரே கைது செய்யப்பட்டவராவார்.

நேற்று முன்தினம் இவரை மன்னார் மாவட்ட மேலதிக நீதி வான் முன் தலைமன்னார் பொலிஸார் ஆஜர்படுத்தியபோது குறித்த நபரை எதிர்வரும் 6ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு மாவட்ட மேலதிக நீதவான்ரி.ஜே. பிரபாகரன் பொலிஸாருக்கு உத்தர விட்டுள்ளார்.

(க)

## கொழும்பில் கருணா குழு அலுவலகம் திறக்கப்படும்

(கொழும்பு)

இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் துணை இராணுவக் குழுவினராகிய கருணா குழுவின்ர் கொழும்பில் விரைவில் அலுவலகம் ஒன்றைத் திறக்கவுள்ளதாக தெரிவிக் கப்படுகின்றது.

ஆனால் அந்த அலுவலகம் எப்போது எங்கு திறக்கப்படும் என்று அறிவிக்கப்படவில்லை. துணை இராணுவக் குழுவினராகிய கருணா குழுவினரை அரசியல் அமைப்பாக காட்டிக் கொள்வதற்காக அரசாங்கம் இத்தகைய முயற்சிக்கு ஆதவளிக்கிறது என்று தமிழ்த் தேசியக்கூட்டமைப்பினர் குற்றம் சாட்டியுள்ளனர்.

(க)

## மத்தியஸ்தர் குழு ஸ்தாபிப்பு

(சில்லாலை)

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட கிராம சேவகர் பிரிவுகளில் உள்ள அரச உத்தியோகங்களிலிருந்து ஒய்வு பெற்ற அதிபர்கள், பிரதேச சபைச் செயலர்கள் , ஆசிரியர்கள் ஆகியோரை உள்ளடக்கிய 18 பேர் கொண்ட மத்தியஸ்தர் குழு ஒன்று கடந்த மாத முதற்பகுதியில் ஸ்தாபிக்கப்பட்டது. கடந்த மாத நடுப்பகுதி முதல் மத்தியஸ்தர் குழு இயங்க ஆரம்பித்துள்ளதாக குழுவின் உறுப்பினர் மாணிக்கம் புவனேந்திரன் தெரி வித்தார்.

இக் குழுவின் செயற்பாடுகளை மல்லாகம் பதில் நீதவான் வசந்த சேனன் கடந்த மாதம் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சண்டிலிப்பாய் பிர தேச செயலகத்தில் வைபவரீதியாக ஆரம்பித்துவைத்தார். (க-58)

# வங்களா தேசத்தில் கலவரம்
# எதிர்க்கட்சிகள் போராட்டத்தில் இருவர் பலி 300பேர் காயம்!

(டாக்கா)

வங்களா தேசத்தில் தேர்தல் சீர்திருத்தம் தொடர்பாக தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி அவாமி லீக் உட்பட 14 கட்சிகள் சார்பில் 6 மணிநேர மறியல் போராட்டம் நடந்தது. இதில் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே நடந்த மோதலில் , ஒரு பொலிஸ் அதிகாரி மற்றும் கட்சித்தொண்டர் என 2 பேர் பலியானார்கள் .300 பேர் காயம் அடைந்தனர்.

நாடுமுழுவதும் உள்ள பல்வேறு நகரங்களில் இந்த ஆர்ப்பாட்டம் நடந்தது. ஆர்ப்பாட்டக்காரர்கள் பொலிஸார் மீது க்றகளை வீசித்தக்கினார்கள். இதில் சப்– இன்ஸ்பெக்டர் அபுல் பஷர் பலத்தகாயம் அடைந்தார். இந்தக் காயம் காரணமாக அவர் பலியானார் .சாலைகளில் சென்ற வானங்கள் மீதும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கற்களை வீசித்தாக்கினார். (கு)

# தேடப்படுவோர் பட்டியலில் சதாமின் மகள், மனைவி

(பக்தாத்)

"பயங்கரவாதம்" தொடர்பாக ஈராக்கில் தேடப்பட்டுவரும் அதிமுக்கிய நபர்களின் பட்டியலில் நேற்று முன்தினம் ஈராக் அரசு முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹுசைனின் மூத்த புதல்வியை யும் அவரது முதல் மனைவியையும் இணைத்தது.

இப்பட்டியலில் ஏற்கனவே 41பேரின் பெயர்கள் இடம்பெற்றிருந்தன. இப்போது இவ்விருவரின் பெயர்களும் மேலதிகமாக சேர்க்கப்பட்டுள்ளன.

இவரது மூத்த புதல்வி ரஹ்மத் தந்தைக்காக மனிதாபிமானத்துக்கு எதிராக மேற்கொள்ளப்படவேண்டிய குற்றச் செயல் திட்டங்களை தயாரிப்பதில் முக்கிய பங்கு வகித்தவர் என தெரிவிக்கப்படுகிறது. இவர் பெரும்பலான காலத்தை அண்டைநாடான ஜோர்தானிலேயே கழித்து வநந்துள்ளார் இவரது தயார் ஜாஜஸ்தாவும் இப்படியலில் உயர் மட்டத்தில் சேர்க்கப் பட்டுள்ளார். (கு)



வங்காளதேசத்தில் கலிதாஜியா அரசைக்கு ராஜினாமா செய்யக்கோரியும் தேர்தல் சீர்திருத்தங்களை அமுல்படுத்தக் கோரியும் டாக்கா நகரில் மறியலில் ஈடுபட்ட பெண்களை பொலிஸார் அடித்து உதைத்து இழுத்துச் செல்லும் காட்சி.


# மோசமான வானிலையால்— 'டிஸ்கவரியின்' பயணம்ரத்து?

(கேப் கெனவரல்)

மோசமான வானிலை காரணமாகடிஸ்கவ்ரி விண்வெளி ஓடத்தை விண்ணில் செலுத்துவது தொடர்ந்து ஒத்திவைக்கப்பட்டு வருகின்றது.

விண்வெளியின் சர்வதேச விண்வெளி ஆய்வு மையம் கட்டுப்பட்டு வருகிறது. இதற்கு தேவையான பொருட்கள் மற்றும் ஏழு விண்வெளி வீரர்களுடன் டிஸ்கவரி விண்வெளி ஒடத்தை புளோரிடாவில் உள்ள கென்னடி மையத்தில் இருந்து விண்ணில் செலுத்த நாசா திட்டமிட்டு இருந்தது. இதற்கான கவுண்டவுன் சில நாட்களுக்கு முன் துவங்கி விட்டது. இந்திய நேரப்படி நேற்று முன்தினம் அதிகாலை 3.49 மணிக்கு டிஸ்கவரி விண்வெளி யோடம் தனதுபயணத்தைதொடங்கியிருக்கவேண்டும். ஆனால் புளோரிடாவில் தொடர்ந்து மோசமான வானிலை காணப்படுகிறது இதனால்டிஸ்கவரியை அனுப்புவதற்கான முதல் பயிற்சி தள்ளிவைக்கப்பட்டது .

நேற்று அதிகாலை டிஸ்கவரியை விண்ணில் செலுத்த முயற்சி செய்யப்பட்டன . இந்த முயற்சியும் தேல்வியில் முடியலாம் என்றே தகவல்கள் வெளியாகியுள்ளன. அடுத்ததாக டிஸ்கவரி விண்வெளி ஓடத்தை எப்போது விண்ணில் செலுத்துவது என் பது குறித் து நாசா விஞ்ஞானிகள் தொடர்ந்து ஆலேசனையில் ஈடுபட்டுள்ளனர். (கு)



பிரான்ஸ் நாட்டில் நடைபெறும் புகழ்பெற்ற டூர் -டி பிரான்ஸ் சைக்கிள் பந்தயத்தின் முதல் சுற்றுப்போட்டி ஆரம்பமான போது.

# பாலஸ்தீன விடுதலை அமைப்பு மீது தடை!

(மெம்பிஸ்)

அமெரிக்காவில் உள்ள பாலஸ்தீன விடுதலை அமைப்பு அலுவலகத்தின் அந்தஸ்தை தற்காலிகமாக குறைத்து அதை தற்காலிகமாக கைவிட்டார் அமெரிக்க அதிபர் புஷ். இந்த தகவலை அதிபர் மாளிகை வட் டாரங்கள் தெரிவித்தன.

இது தொடர்பாக அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கான்டலீஸா ரைஸுக்கு புஷ் கடிதம் எழுதியுள்ளார்.

பாலஸ்தீன் விடுதலை அமைப்பும், பாலஸ் தீன அரசும் சட்டத்துக்கு உடன்பாடாக நடக்க வில்லை. இதற்காக அதன் மீது தடைவிதிக்க 2003 ஆம் ஆண்டு வெளியுறவுஅதிகார சட்டத்தின் கீழ் வகை உள்ளது. அதன் படி இந்த நடவடிக்கையை எடுத்துள்ளதாக அந்த கடித்தில் புஷ் தெரிவித்துள் ளார் .

இந்த தடையும் அதை அமுல்படுத்தவில்லை என்ற ஆணையும் ஜுன் 30 ஆம் திகதியிலிருந்து 180 நாள்களுக்கோ அல்லது பாலஸ்தீனர்கள் நடவடிக்கை தொடர்பாக அதிபர் மாளிகை புதிய அறிக்கை தரும் வரையோ அமுலில் இருக்கும்.

ஐநா பாதுகாப்பு மன்றத்தின் 242, 338 ஆவது தீர்மானங்களை ஏற்பது பேச்சுவார்த்தை மற்றும் அமைதி வழியில் இஸ்ரேல் பாலஸ்தீன பிரச்சினைக்குத் தீர்வு காண்பது பயங்கரவாதம் மற்றும் வன்செயல்களைக் கைவிடுவது ஆகிய 4 விடயங்கள் சட்டத்துக்கு உட்பட்டு பாலஸ்தீனம் செயல்பட வேண்டும்.

பாலஸ்தீன விடுதலை அமைப்புக்கு விசா மறுப்பது மேலக்கரை மற்றும் காஸா பகுதிக்கான அமெரிக்க நிதி உதவியை நிறுத்துவது பாலஸ்தீன விடுதலை அமைப்பை பயங்கரவாத அமைப்பாக அறிவிப்பது போன்ற பிற தடை நடவடிக்கைகளை எடுக்கவும் இந்த சட்டப்படி அதிபருக்கு உரிமையுள்ளது. (கு)

## WORLD NEWS உலக தரிசனம்

# பூமியை நெருங்கி வரும் இராட்சத விண்கலம்!!




(ஸாஸ்ஏஞ்சல்ஸ்)

விண்வெளியில் சுற்றும் இராட்சத விண்கல் ஒன்று பூமியை நெருங்கி வருகிறது.

விண்வெளியில் ஏராளமான சிறு சிறு கோள்கள் சுற்றி வருகின்றன.

இதில் ஒரு சில கோளில் இருந்து உடைந்துபிரிந்த விண்கல் அதன் சுற்று வட்டப் பாதையில் இருந்து விலகி பூமியை நெருங்கி வருகிறது.

கடந்த 2004 ஆம் ஆண்டு இந்த ராட்சத விண்கல்லை கண்டு பிடித்த விஞ்ஞானிகள் அதற்கு எக்ஸ் பி. 14 பீ என்று பெயரிட்டுள் ளனர்.

900 மீற்றர் அகலம் கொண்ட இந்த விண்கல் இது வரை இல்லாத அளவுக்கு பூமியை நெருங்கி வருகிறது.

ஆனால் பூமிக்கு இதனால் எந்த ஆபத்தும் இல்லை . பூமியை அது தாக்கும் வாய்ப்பு இல்லை என்றும் விஞ்ஞா னிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த விண்கல் இந்த ஆண்டு இறுதியில் பூமியில் விழுந்து தாக்கும் என்று முன்பு விஞ்ஞானிகள் கூறி இருந்தனர் .

தற்போது இந்த விண்கல் வட அமெரிக்காவுக்குமேலே பூமியில் இருந்து 2 இலட்சத்து 68 ஆயிரம் மைல் துரத்தில் இருக்கிறது. (கு)

குற்றம் செய்யும் ஒவ்வொருவரும் தன் இலட்சியத்தை அடையாது தன் நெறி தவறியவனே.
-ஔரேலியன் மார்க்கஸ்

வலம்புரி

## பணிப்புறக்கணிப்பு மீண்டும் தொடராமல் பார்த்துக்கொள்வது அரசின் தார்மீகப்பொறுப்பு

அரச நிறுவனங்கள் மேற்கொண்ட பணிப்புறக்கணிப்பு நேற்றுடன் முடிபுக்கு வந்துள்ளது.

அரச திணைக்களங்களில் பணிப்புறக்கணிப்பினூடாக யாழ்.மாவட்டத்தில் அரச நிர்வாகம் இய்ங்க முடியாதவாறு செய்ய முடியுமென்பது வெளியுலகிற்கு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட மக்களின் இயல்பு நிலை மற்றும் தாக்குதல் சம்பவங்களை நிறுத்தல் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து நடாத்தப்பட்ட மேற்படி பணிப்புறக்கணிப்பு மேலும் தொடராதவாறு பார்த்துக்கொள்ளும் பொறுப்பு அரசினுடையதாகும்.

இதைவிடுத்து யாழ்ப்பாணத்தில் படையினர் குவிக்கப்பட்டிருந்தால் -அவர்களின் கட்டுப்பாட்டில் யாழ்ப்பாணம் இருந்தால் போதுமானது.

அரச திணைக்களங்கள் மற்றும் வங்கிகள் இயங்குவதும் இயங்காமல் விடுவதும் பற்றி எமக்கு இம்மியும் வருத்தம் கிடையாது என அரசு கருதுமாயின் நிலைமை மோசமாகவே அமையும்.

யாழ்ப்பாணம் அரச கட்டுப்பாட்டில் இருப்பதை தனித்து படைக்குவிப்பின் மூலம் காட்டிவிடமுடியாது. மாறாக அரச நிர்வாகம் செம்மையாக இருக்கவும் வேண்டும்.

எனவே யாழ்ப்பாணத்தில் தற்போது ஏற்பட்டுள்ள குழப்ப நிலையை சுமுகமாக்கி இயல்பு நிலையை ஏற்படுத்துவதன் ஊடாக பணிப்புறக்கணிப்பு மீண்டும் ஏற்படாதிருப்பதை உறுதி செய்ய முடியும்.

இது அரச பக்கத்தில் நடைமுறைப்படுத்த வேண்டியவை. மறுபுறத்தில் யாழ்.மாவட்டத்தில் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்ட அரச திணைக்களங்கள் , பாடசாலைகள் மற்றும் வங்கிகளின் அமைப்புகளுக்கு ஓர் தார்மீகக்கடமையுண்டு.

அதாவது , கடந்த ஒருவார காலமாக இடம் பெற்ற பணிப்புறக்கணிப்பினால் ஸ்தம்பித்துப் போன பணிகளை மிக விரைவாக செய்து முடிப்பதேயாகும்.

அதாவது, பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டதன் ஊடாக யாழ்ப்பாண நிலைமை நிச்சயம் வெளி உலகிற்கு எடுத்துச் செல்லப்பட்டிருக்கும்.

இது யாழ்.மாவட்டத்தில் உள்ள அரச திணைக்களங்களின் ஒட்டுமொத்தமான ஒத்துழைப்பினால் ஏற்பட்டதாகும்.

இவ்விதம் பணிப்புறக்கணிப்பிற்கு வழங்கிய அதே ஒத்துழைப்பை பணிப்புறக்கணிப்பினால் ஏற்பட்ட சேவை இழப்பீட்டை நிவர்த்தி செய்வதற்கும் வழங்க வேண்டுமென்பதே பொதுமக்களின் கோரிக்கையாகும்.

குறிப்பாக யாழ்.செயலகப்பணிகள் , பிரதேச செயலகங்களின் பணிகள் ஸ்தம்பிதமடைந்ததினால் பொதுமக்கள் தமது தேவைகளை நிறைவு செய்யமுடியாமல் இருந்தனர்.

எனவே இதைக்கருத்தில் கொண்டு யாழ்.மாவட்டத்தில் உள்ள அனைத்து அரச நிறுவனங்களும் நேரம் பாராது மக்களின் தேவைகளை நிறைவேற்றிக்கொடுக்க முன்வரவேண்டும்.

அதேபோல் பாடசாலை நிர்வாகங்களும் இழந்த கல்வியை மீட்டெடுக்க உரிய ஏற்பாடுகளை செய்தாகவேண்டும்.இதுவே எமது மக்களுக்கு செய்யும் பெரும் சேவையாகும்.

# சேவைத்திட்டங்கள் மூலம் சாவகச்சேரியை மீளக்கட்டியெழுப்ப லயன்ஸ் கழகம் உதவும்

## சர்வதேச லயன்ஸ் கழக இணைப்பாளர் வீ.எஸ்.சொக்கலிங்கம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

2000ஆம் ஆண்டில் இடம்பெற்ற யுத்த நடவடிக்கை காரணமாக சேதமடைந்தநிலையில் இருக்கின்ற சாவகச்சேரி பிரதேசத்தை சேவைத்திட்டங்கள் மூலம் மீளவும் கட்டியெழுப்ப வேண்டிய பொறுப்பும் கடமையும் லயன்ஸ் கழக உறுப்பினர்களுக்கு உண்டு. இதை நெஞ்சில் பதிந்து சாவகச்சேரி லயன்ஸ் கழக உறுப்பினர்கள் தம் பணிகளைப் பயன் கருதாமல் ஆற்றவேண்டும்.

இவ்வாறு சர்வதேச லயன்ஸ் கழகங்களின் 306 பி - மாவட்டத்தின் இணைப்பாளரான லயன் வீ.எஸ். சொக்கலிங்கம் ஜே.பி. கடந்த சனியன்று சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடாத்தப்பட்ட சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் 28 வது பதவியேற்பு வைபவத்தின் போது பிரதம விருந்தினராகப் பங்குகொண்டு உரையாற்றும் போது தெரிவித்தார்.

கழகத்தின் 2006 /2007 காலப்பகுதிக்கான தலைவர் லயன் வடிவேல் ஸ்ரீபிரகாஸ் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் யாழ்ப்பாணம், தீவகம், வடமராட்சி, அச்சுவேலி, இணுவில், நல்லூர், கோப்பாய், தென்மராட்சி, சுன்னாகம் ஆகிய கழகங்களின் பிரதி நிதிகளும் கலந்துகொண்டனர்.மாவட்ட இணைப்பாளர் லயன் சொக்கலிங்கம் அங்கு தொடர்ந்து உரையாற்றும் போது

லயன்ஸ் கழகங்களின் 306 பி 1 மாவட்டத்தில் இருக்கின்ற 53 கழகங்களுள் சாவகச்சேரி கழகம் மாவட்ட ஆளுநரால் முதன்மை மிக்க கழகமாகவும் முதன்மைத் தலைவராகவும் லயன் சிவபாலசுப்பிரமணியம் தெரிவு செய்யப்பட்டமையானது கழக உறுப்பினர்கள் அனைவரும் காட்டியிருந்த அர்ப்பணிப்புக்குக் கிடைந்த மாபெரும் பரிசாகும்.

சர்வதேச லயன்ஸ் கழகமானது உலகிலேயே மிகவும் பெரிய சேவை நிறுவனமாகும். இக் கழகத்தில் உறுப்பினர்களாக இருப்பவர்கள் தம்மை அர்ப்பணித்து பாதிக்கப்பட்ட மக்களுக்குச் சேவை செய்பவர்கள். சேவைத்திட்டங்களை நாம் அமுல் செய்யும் போது எம்மத்தியில் புரிந்துணர்வை வளர்த்து மிக்க விசுவாசத்துடன் செய்தல் முக்கியமாகும்.

லயன்ஸ் கழகங்களின் பல்வேறு வகைப்பட்ட சேவைகளால் வறிய மக்கள் நன்மைகளை அடைந்து வருகின்றனர். இதனை உறுப்பினர்கள் கவனத்தில் கொண்டு சேவையாற்ற வேண்டும் இவ்வருடத்திலும் வட பிரதேசத்திலுள்ள அனைத்துக்கழகங்களும் பெறுமதிமிக்க சேவைகளை ஆற்ற வேண்டும் என்று குறிப்பிட்டார்.

இந்நிகழ்வின் போது 2005/2006 ஆம் ஆண்டுக்கான கழகத்தலைவர் லயன் எஸ். சிவபாலசுப்பிரமணியம் கழக உறுப்பினர்களின் சேவைகளையும் அர்ப்பணிப்பையும் பாராட்டி நினைவு பரிசில்களை வழங்கியிருந்தார்.

மேலும் இந்நிகழ்வின்போது கழகத்தினால் நடாத்தப்பட்ட இலவச ஆங்கில வகுப்பில் பயின்று சித்தியெய்திய மாணவர்களுக்கான சான்றிதழ்களும் கல்விப் புலமைப்பரிசில் திட்டமாணவர்களுக்கான பணக்கொடுப்பனவுகளும் வழங்கப்பட்டன.அத்துடன் கழகத்தில் புதிதாக இணைந்து கொண்ட எட்டு உறுப்பினர்களுக்கான பதவிப்பிரமாணங்களை மாவட்ட இணைப்பாளர் லயன் சொக்கலிங்கம் செய்துவைத்தார். (சு-16)

## சாரதி தாக்கப்பட்டதையடுத்து பஸ்சேவை பகிஷ்கரிப்பு

(யாழ்ப்பாணம்)

இ.போ.ச சாரதியொருவர் நேற்று முன்தினம் கடமையிலிருந்த போது இராணுவத்தினரால் தாக்கப்பட்டதைக் கண்டிக்குமுகமாக நேற்று இ.போ.ச ஊழியர்கள் அனைவரும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர் இதன்காரணமாக குடாநாட்டின் பஸ் சேவைகள் அனைத்தும ஸ்தம்பிதமடைந்தது.

நீர்வேலி வடக்கைச்சேர்ந்த இ.போ.ச சாரதியான மயில்வாகனம கண்ணதாசன் (வயது 26) என்பவரே நேற்று முன்தினம் கே. கே. எஸ் வீதியில் படையினரால் தாக்கப்பட்டவராவார்.

திடீரென மேற்கொள்ளப்பட்ட இப் பகிஷ்கரிப்பு காரணமாக பொதுமக்கள் மாத்திரமன்றி பாடசாலை மாணவர்கள் அரச ஊழியர்கள் என்போரும் பெரும் பாதிப்புக்குள்ளானார்கள்

இரண்டு மாதங்களுக்கு முன் இதே போல ஊர்காவற்றுறையில் இ.போ.ச சாரதியும் நடத்துநரும் தாக்கப்பட்டது தொடர்பாக அரச அதிபர், யாழ். பிராந்திய பொலிஸ் அதிகாரிகள், இராணுவத்தளபதிகளுக்கிடையிலான சந்திப்பின் போது வருங்காலத்தில் இது போன்ற சம்பவங்கள் நடைபெற மாட்டாது என இராணுவத்தரப்பில் உறுதி மொழி வழங்கப்பட்ட போதிலும் அது சரிவரக்கடைப்பிடிக்கபடவில்லை என கவலை தெரிவிக்கப்பட்டது. (து-133)

## அதிக பரிசுகளைப் பெற்ற இ.த.க.பாடசாலை

(யாழ்ப்பாணம்)

யாழ். திருநெல்வேலி பழங்கிணற்றடி வீரகத்தி விநாயகர் ஆலய உற்சவகால சைவ நெறி போட்டியில் தரம் 1 தொடக்கம் தரம் 5 வரையிலான பிரிவுகளில் திருநெல்வேலி இந்து தமிழ் கலவன் பாடசாலை மாணவர்கள் அதிக பரிசுகளைப் பெற்றுள்ளனர். போட்டியில் பங்குபற்றிய மேற்படி பாடசாலையின் 80 மாணவர்க ளுக்கும் ஊக்கு விப்புப் பரிசில்கள் வழங்கப்பட்டதுடன் முத லாம் இரண்டாம் மூன்றாம் இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கு பெறுமதியான பரிசில்கள் ஆலய பரிபாலன சபையால் வழங்கப்பட்டன. (க)

## மஹோற்சவ பெருவிழா

சாவகச்சேரி அருள்மிகு ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் மஹோற்சவ பெருவிழா எதிர்வரும் 15 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 26 ஆம் திகதி வைரவர் சாந்தியுடன் நிறைவடையும்

கொடியேற்றத்துடன் 15 ஆம் திகதி ஆரம்பமாகு ம் மஹோற்சவ பெருவிழாவில் 21 ம் திகதி வேட்டைத்திருவிழாவும் 23 ம் திகதி தேர்த்திருவிழாவும் 24 ம் திகதி தீர்த்தத்திருவிழாவும் 25 ம் திகதி பூங்காவனத்திருவிழாவும் இடம் பெறும் என தேவஸ்தான தர்மகர்த்தா பா .கணபதி சர்மா தெரிவித்துள்ளார். (க)

## 6 ஆயிரம் பேருக்கு போர்ப்பயிற்சி

(கிளிநொச்சி)

இலங்கையில் எந்த நேரத்திலும் போர் வெடிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதால் இராணுவம் உசார் நிலையில் உள்ளது. அதேபோல் விடுதலைப்புலிகளும் வன்னிப் பெருநிலப்பரப்பில் பதுங்கு குழிகள் மற்றும் பாதுகாப்பு அரண்கள் அமைத்து வருகிறார்கள்.

தமிழர்கள் மீது இராணுவம் தாக்குதல் நடத்துவதால் அதைச் சமாளிக்க பொதுமக்களுக்கு விடுதலைப்புலிகள் போர்ப்பயிற்சி அளித்து வருகிறார்கள்.

இதன்படி சுமார் 6 ஆயிரம் பேருக்கு விடுதலைப்புலிகள் போர்ப்பயிற்சி அளித்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. இராணுவத்தாக்குதலை இனிப்பொதுமக்கள் சமாளிப்பார்கள் என்றும் துப்பாக்கி சுடுவதில் நல்ல முறையில் தேர்ச்சி பெற்ற கிராம வாசிகளுக்கு விடுதலைப்புலிகள் பரிசில்களை வழங்கினார்கள் என்றும் இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (க)

## சட்டவிரோத செயல்கள் நுணாவிலில் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

நுணாவில் பகுதியில் சட்டவிரோத மின் இணைப்பு பெறுதல், கசிப்பு உற்பத்தியும் விற்பனையும் மற்றும் திருட்டுச் சம்பவங்களும் அதிகரித்துள்ளதாக தெரியவருகின்றது.

இத்தகைய சம்பவங்களை இல்லாமல் செய்வதற்கான முயற்சிகளை அப்பகுதியின் கிராமசேவையாளர் மற்றும் சமுதாய ஆர்வலர்கள் பல தடைவைகள் மேற்கொண்டிருந்த போதிலும் கூட அவை மூலம் சாதகமான பலன்கள் கிடைக்கவில்லை எனக்கூறப்படுகின்றது

இதேவேளை இத்தகைய சம்பவங்களை நிறுத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளும்படி தென்மராட்சி பிரதேச செயலருக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதாக வும் தெரிவிக்கப்படுகிறது. (க)

### தினசரி தியானம் விவேகச் சிந்தனைகள்



மூதாதையர்கள் விட்டுச் சென்ற சொத்தை அடைந்தவனுடைய புகழ் நிலைத்து நிற்பதில்லை. தன் அறிவின் துணைகொண்டு உழைப்பின் மூலம் முன்னேறுபவனைத்தான் மனித இனம் மதிக்கிறது.


சுவாமி விவேகானந்தர்

# தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான ஐரோப்பிய ஒன்றியத் தடை தவறானது

## மக்கன்ஸ் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான ஐரோப்பிய தடையானது பாரிய தவறு என்று வட அயர்லாந்து விடுதலையமைப்பின் முன்னாள் தலைவர் மக்கன்ஸ் தெரிவித்துள்ளார்.



வடஅயர்லாந்து விடுதலையமைப்பான ஐ.ஆர்.ஏயின் முன்னாள் தலைவரும் அதன் அரசியல் பிரிவான சின்பெய்ன் பிரதிநிதியுமான மார்ட்டீன் மக்கன்ஸ் கிளிநொச்சியில் தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளை நேற்றுச் சந்தித்துப் பேசினார்.

கிளிநொச்சியிலுள்ள விடுதலைப்புலிகளின் சமாதான செயலகத்தில் நேற்றுக் காலை 11 மணியளவில் இச்சந்திப்பு நடைபெற்றது.

விடுதலைப்புலிகளின் தரப்பில் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், சமாதான செயலகப்பணிப்பாளர் சீ.புலித்தேவன் ஆகியோர் இச் சந்திப்பில் பங்கேற்றனர்.

இச் சந்திப்பின் பின்னர் ஊடகவியலாளர்களிடம் மக்கன்ஸ் கூறியதாவது;

நாம் அயர்லாந்திலிருந்து வந்திருக்கின்றோம். உலகில் மிகவும் வெற்றிகரமான அமைதிப் பேச்சுவார்த்தையை நாம் நடத்தியிருக்கின்றோம். எமது சின்பெய்ன் இயக்கத்தின் அனுபவங்களை தமிழீழ விடுதலைப் புலிகளுடன் மட்டுமல்லாது அரச தரப்புடனும் பகிர்ந்து கொள்ளவுள்ளோம்.

எம்மீது பிரித்தானியா பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடைவிதித்திருந்த நிலையில்தான் நாம் பேச்சுக்களை நடத்தினோம்.

அமைதிப் பேச்சுக்களில் ஈடுபட்டுள்ள இரு தரப்பினரையும் சம தரப்பாக உரிய மரியாதையுடன் நடத்த வேண்டும். தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர்களுக்கும் ஐரோப்பிய ஒன்றியம் தடைவிதித்திருப்பதானது பாரிய தவறானது என்றார் மக்கன்ஸ்.

அயர்லாந்து விடுதலையமைப்பான ஐ.ஆர்.ஏயில் 1970 ஆம் ஆண்டில் தனது 20ஆவது வயதில் மக்கன்ஸ் தன்னை இணைத்துக் கொண்டார். ஐ.ஆர்.ஏயின் 2 ஆம் நிலைத் தலைவராக 21 வயதில் பொறுப்பேற்றார்.

அயர்லாந்து விடுதலையமைப்பான சின்பெய்ன் இயக்கத்தில் மூத்த தலைவராக உருவான மக்கன்ஸ் 1972 ஆம் ஆண்டு பிரித்தானியாவுடன் நடந்த பேச்சுக்களில் பங்கேற்றார்.

அதன் பின்னர் 1994 ஆம் ஆண்டில் பிரித்தானியாவின் பல்வேறு பேச்சுக்களில் அவர் கலந்து கொண்டார். புதிய வட அயர்லாந்து சபையின் கல்வியமைச்சராக 1999 ஆம் ஆண்டு நவம்பரில் இவர் தெரிவு செய்யப்பட்டார். (ச-5)



தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், மக்கன்ஸ் தலைமையிலான குழுவினரை வரவேற்பதைப் படத்தில் காணலாம்.

## இராசிபலன்

**04.07.2006**
**(ஆனி 20, செவ்வாய்க்கிழமை)**
**அட்டமி முற்பகல் 09.18 மணிவரை**
**அத்தம் காலை 08.12 மணிவரை**
**இராகுகாலம் 02.57-04.27மணிவரை**
**சுபநேரம் 10.27-11.57 மணிவரை**
**சித்த யோகம்**

| | |
|---|---|
| மேடம் | கௌரவமான நிலை, அபூர்வ சந்திப்பு, பணவருவாய், வாகன்வசதி. |
| இடபம் | சுகவாழவு, சத்துருஜெயம், பணவருவாய், தொழில் விருத்தி. |
| மிதுனம் | காரிய இடையூறு, மனச்சஞ்சலம், கௌரவக்குறைவு, ஆரோக்கியக்குறைவு. |
| கடகம் | கலவியில் ஆர்வம், அற்பர் உறவு, பயந்த சுபாவம், திடீர் நன்மை. |
| சிங்கம் | இனிய அனுபவம், வாக்குமேன்மை, காரிய அனுகூலம், பொருள் சேர்க்கை. |
| கன்னி | வாக்குமேன்மை, முயற்சி தாமதம், வேலைச்சுமை, பொருள் விரயம். |
| துலாம் | பெரியோர் ஆசி, ஆழ்ந்தசிந்தை, நல்ல முயற்சி, சயனசுகம். |
| விருச் | பிதாசிந்தை, கோபப்படுதல், பணவிர யம், காரியதாமதம். |
| தனுசு | தொழிலசிந்தை, பெருமையடைதல், பொருள் சேர்க்கை, நண்பர்கள் சந்திப்பு. |
| மகரம் | சுபநிகழ்ச்சி, கடின உழைப்பு, பிறர் உதவி, நல்ல செய்தி. |
| கும்பம் | ஆன்றோர் மதிப்பு, உடல் உழைப்பு, வீண்பயம், புதியமுயற்சி. |
| மீனம் | வீண தொல்லை, போசனசுகம், முயற்சி தடங்கல், உடல்நலக்குறைவு. |

- வளவன்

## செயல்முறைப் பரீட்சை புதிய திகதி அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

சாரதி அனுமதிப்பத்திர செயல்முறைப் பரீட்சைகள் புதிய திகதிகளுக்கு மாற்றப்பட்டுள்ளதாக யாழ்.மோட்டார் போக்குவரத்து உதவி ஆணையாளர் வி.பத்மநாதன் அறிவித்துள்ளார்.சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான செயல் முறைப் பரீட்சையின் புதிய திகதி வருமாறு;

| செயன்முறைப் பரீட்சை நடைபெற இருந்த திகதி | செயன்முறைப்பரீட்சை நடைபெறவுள்ள புதிய திகதி | நேரம் |
|---|---|---|
| 2006.06.24 | 2006.07.06 | பி.ப.2 மணி |
| 2006.06.26 | 2006.07.07 | பி.ப.2 மணி |
| 2006.06.27 | 2006.07.10 | மு.ப.9 மணி |
| 2006.06.28 | 2006.07.12 | பி.ப.2 மணி |
| 2006.06.29 | 2006.07.13 | பி.ப.2 மணி |
| 2006.06.30 | 2006.07.14 | பி.ப.2மணி |

## சமாதான நடவடிக்கைகள் குறித்து...

சுமார் ஒரு மணி நேரம் வரை நீடித்த சந்திப்பின் போது வெளிநாட்டமைச்சர் மங்கள சமரவீர, இந்திய உயர் ஸ்தானியர் நிருபமா ராவ், ஜனாதிபதியின் செயலர் லலித் வீரதுங்க, வெளிநாட்டமைச்சின் செயலர் பள்ளிக்கார ஆகியோர் கலந்து கொண்டனர்.

இலங்கையரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் எதிர்கால செயற்பாடு தொடர்பில் முறுகலான சூழ்நிலை தோன்றியுள்ள இந்த வேளையில் இலங்கையில் தற்போது இடம்பெற்றுக் கொண்டிருக்கும் வன்முறைகள் முழுமையான போராக மாறிவிடுமோ என்று பரவலாக அச்சம் எழுந்துள்ள நிலையில், இந்திய மூத்த அதிகாரி ஒருவர் கொழும்புக்குத் திடீர் விஜயம் மேற்கொண்டு ஜனாதிபதியைச் சந்திக்கும் நிகழ்வு மிகவும் முக்கியமானதாக கருதப்படுகின்றது.

இலங்கையில் நடந்து வரும் தற்கொலை குண்டுத் தாக்குதல்கள், விமானத் தாக்குதல்கள் மற்றும் படுகொலைகள் குறித்து தனது கண்டனத்தையும் அதிருப்தியையும் இந்தியா வெளியிட்டுவருகின்றது.

போர்நிறுத்த உடன்பாட்டினை சகல தரப்பினரும் உறுதியாக கடைப்பிடிக்க வேண்டும் என்றும் அத்துடன் சமாதான முயற்சிகள் தொடர்ந்தும் உறுதியாக முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும் இந்தியா வலியுறுத்தி வருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சிகளில் இந்தியா அதிகபட்ச பங்களிப்பினை வகிக்க வேண்டும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் அவரது தேர்தல் கூட்டாளிகனா ஜே.வி.பி.மற்றும் ஜாதிக ஹெலஉறுமய போன்ற கட்சிகள் கோரி வருவதும். அத்துடன் அண்மையில் விடுதலைப்புலிகள்கூட, இந்தியா இலங்கையில் தமிழர்கள் தமது உரிமைகளை வென்றெடுக்க தனது தார்மீக உதவிகளை வழங்க வேண்டும் என கோரிவருவதும் குறிப்பிடத்தக்கது. இதற்கிடையில் இந்திய வெளியுறவுச் செயலரின் இலங்கை விஜயம் குறித்து இந்திய வெளியுறவுத் துறைக்காக பேச வல்ல அதிகாரியான நவ்தேஜ் சர்னா நேற்று புதுடில்லியில் செய்தியாளர்களிடம் பேசுகையில் இந்த விஜயம் இலங்கை வெளியுறவுச் செயலரின் அழைப்பின் பேரில் மேற்கொள்ளப்பட்டதாகவும் இது வழமையாக இரு நாடுகளுக்கு இடையே நடக்கும் உயர் மட்டக் கருத்துப் பரிமாறல்களின் ஒரு பகுதியாகும் என் றும் கூறினார். இந்தக் கருத்துப் பரிமாறல்களின்போது பரந்துபட்ட அளவில் இருதரப்புக் கூட்டுறவு மற்றும் இலங்கை அமைதி வழிமுறையில் தற்போதைய நிலை குறித்தும் விவாதிக்கப் படும்என்றும் அவர் கூறினார். (ச-5)

## சாரதி...

இச் சந்திப்பில் இ.போ.ச.பொது முகாமையாளர் கே.கணேசபிள்ளை தலைமையில் சாரதிகள், நடத்துநர்கள் எனப்பலர் கலந்து கொண்டனர்.

நேற்று பிற்பகல் 1.30 மணியளவில் பிரதம சிவில் இணைப்பதிகாரி கேணல் பெரகரா உடனான இச் சந்திப்பில் மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமியும் கலந்து கொண்டார்.

சாரதி தாக்கப்பட்ட சம்பவம் குறித்து வருத்தம் தெரிவித்த இராணுவப் பிரதம சிவில் இணைப்பதிகாரி தாக்கப்பட்ட ஊழியரை தான் பார்வையிட்டதாகவும் வருங்காலத்தில் இத்தகைய சம்பவம் எதுவும் நடைபெறமாட்டாது என தான் உத்தரவாதம் அளிப்பதாகவும் இது குறித்து ஏனையவர்களுடன் பேசி தகுந்த நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதியளித்தார்.

இச் சந்திப்பைத் தொடர்ந்து பிற்பகல் 4 மணி முதல் முடங்கிக்கிடந்த பஸ் சேவை வழமைக்குத் திரும்பியது. (து-15,5,133)

## கிளைமோர்த்...

காயமடைந்ததாக தேசிய பாதுகாப்பு தகவல் மையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை மூதூர் கட்டைப்பறிச்சான் முகாம் மீது தமிழீழ விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தியுள்ளதாக படையினர் தெரிவித்துள்ளனர். நேற்றுக் காலை 6.10 மணியளவில் கட்டுப்பாடற்ற பகுதிமீது மோட்டார்த் தாக்குதல் நடத்தப்பட்டது. சேதவிபரங்கள் வெளியாகவில்லை.

இதேவேளை அம்பறை உகரகோணகம பிரதேசத்திலுள்ள காவலரண்மீது நேற்றுக் காலை 5 மணியளவில் தமிழீழ விடுதலைப் புலிகள் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து இரு தரப்பினருக்குமிடையில் 5 நிமிடங்கள் வரை பரஸ்பர துப்பாக்கிப்பிரயோகம் இடம் பெற்றதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ச-5,9)

## இளைஞன் சுட்டுக்கொலை

(வவுனியா)

வவுனியா தாண்டிக்குளம் பகுதியில் இளைஞன் ஒருவர் இராணுவத்தினரால் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

நேற்று அதிகாலை அவரை சுட்ட படையினர் அவரிடமிருந்து கைத்துப்பாக்கி ஒன்றையும் கைக்குண்டு ஒன்றையும் மீட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். (ச-5)

## களுவாஞ்சிக்குடியில் கைக்குண்டு வீச்சு

களுவாஞ்சிக்குடிப் பொலிஸ் காவலரண் மீது கைக்குண்டுத் தாக்குதல் ஒன்று நேற்று பிற்பகல் 3 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இதில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். வீதியால் சென்றபெண் ஒருவர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கொல்லப்பட்டவர் இதுவரையில் அடையாளம் காணப்படவில்லை. காயமடைந்தவர் பட்டிருப்பு வலயக் கல்வி அலுவலகத்தின் முறைசாரா கல்வித்திட்டப் பணிப்பாளர் திருமதி பாஸ்கரன் (வயது-40) எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)




இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.2 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.07.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.